

# மாலெ தீப்பொறி

MALAE THEEPORI

2024 செப். 16-30 தொகுதி 23 இதழ் 04 விலை ரூ:10 ஆண்டு சந்தா ரூ:200

# மார்க்சிஸ்ட் ஒருங்கிணைப்புக் குழு (எம்சிசி) சிபிஐ(எம்எல்) விடுதலையுடன் இணைந்தது





## தோழர்
# சீதாராம் யெச்சூரிக்கு செவ்வணக்கம்!

தோழர் சீதாராம் யெச்சூரியின் மறைவு செய்தி எமக்கு மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. இந்த நெருக்கடியான தருணத்தில் அவரது மறைவானது இந்திய கம்யூனிச இயக்கத்திற்கும் ஜனநாயகம் காக்க, கூட்டாட்சி கட்டமைப்பு மற்றும் கலாச்சார பன்மைத்துவம் ஆகியவற்றிற்காகப் போராடும் ஒவ்வொரு இந்தியருக்கும் பெரும் இழப்பாகும். பல்கலைக் கழகங்கள் முதல் தொழிற்சங்கங்கள் வரையிலான பல்வேறு விதமான உரையாடல் மற்றும் விவாத மேடைகளைக் கொண்ட ஒட்டுமொத்த இந்திய ஜனநாயக இயக்கமும் அவரை இழந்து நிற்கும். இழப்பும் துக்கமும் நிறைந்த இந்த நேரத்தில், நாங்கள் ஒட்டுமொத்த சிபிஐஎம் கட்சித் தோழர்களுடனும் தோழர் யெச்சூரியின் குடும்பத்தாருடனும் நண்பர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனும் நிற்கிறோம். சென்று வாருங்கள் தோழர் சீதாராம் அவர்களே! சோசலிச இந்தியாவிற்கான உங்களுடைய பயணத்தை எங்களின் அனைத்து பலத்தையும் கொண்டு முன்னெடுத்துச் செல்வோம்.

***தோழர் சீதாராம் யெச்சூரிக்குச் செவ்வணக்கம்!***

***.மத்தியக் கமிட்டி; இகக(மாலெ)***



பொதுச்செயலாளர் திபங்கர் அஞ்சலி

மாலை தீப்பொறி

இருவார இதழ்

2024 செப் 16 - 30

தொகுதி 23 இதழ் 04

முதன்மை ஆசிரியர்

சங்கர் .வீ

ஆசிரியர்

ஜி. ரமேஷ்

ஆசிரியர்குழு

பழ. ஆசைத்தம்பி

பாலசுந்தரம்

அ. சந்திரமோகன்

கே. ஜி. தேசிகன்

மேலாளர்

சொ. இரணியப்பன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)

தமிழ்நாடு மாநிலக் கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254 பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

www.tamilnadu.cpiml.net
malaetheepori@gmail.com

# எதற்காகப் பள்ளிக்கூடங்கள்? யாருக்காகப் பள்ளிக் கூடங்கள்?

தமிழ்நாட்டில் அடுத்தடுத்து இரண்டு பிரச்சனைகள் கவனத்தை ஈர்த்தன. ஒன்று சென்னை அரசு பள்ளிக்கூடங்களில் நடைபெற்ற சொற்பொழிவு! மற்றொன்று நிதியமைச்சரிடம் ஜிஎஸ்டியின் அவலம் குறித்து கோவை அன்னபூர்ணா ஓட்டல் உரிமையாளர் பேசியதற்கு அவரை மன்னிப்பு கேட்க வைத்த அராஜகச் செயல். பிஞ்சு உள்ளங்களில் நஞ்சை விதைப்பது ஆபத்தானது. பரம்பொருள் பவுண்டேசன் என்ற பெயரில் கோடிக்கணக்கில் பணம் பார்க்கும் நபர் அரசுப் பள்ளிக்கு 1லட்ச ரூபாய் நன்கொடை அளித்துவிட்டு, மாணவர்கள் மத்தியில் ஆன்மீகச் சொற்பொழிவு என்ற பெயரில் மூடநம்பிக்கையைப் பரப்பினார். முற்பிறவியில் செய்த பாவத்தால்தான் இப்பிறவியில் மாற்றுத் திறனாளிகளாகப் பிறக்கிறார்கள் என்றார். அதற்கு அப்பள்ளியில் இருந்த பார்வைச் சவால் கொண்ட ஆசிரியர் சங்கர் உடனே எதிர்ப்பு தெரிவித்தார். அந்த போலி சொற்பொழிவாளர், ஆணவத்துடன் ஆசிரியரை அவமானப்படுத்தினார். வழக்கம்போல் சங்கிகள் அந்தச் சொற்பொழிவாளருக்கு வக்காலத்து வாங்கினார்கள். அரசுப் பள்ளிக் கூடங்களில் ஆன்மீகம் கற்றுக் கொடுக்கக் கூடாதா? தனியார் பள்ளிகளில், சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் அவர்கள் மதப் பிரச்சாரம் செய்யவில்லையா? என விஷத்தைக் கக்கினார்கள். தொடர்ந்து அவர் இந்துக் கடவுள்கள் பற்றி பேசியதும் வெளியே வர, சங்கிகள் அடங்கிப் போனார்கள். ஆங்கிலேயராவது அனைத்து சாதியினரும் கல்வி கற்க வாய்ப்பளித்தார்கள். அவர்கள் நடத்திய பள்ளிக் கூடங்களில் படித்த மாணவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்களாக மாறிவிடவுமில்லை. அப்பள்ளிகள்தான் மாணவர்களுக்கு அறிவியலைக் கற்றுக் கொடுத்தன. தற்போது சில தனியார் பள்ளிகளில் நடப்பதுபோல், அரசுப் பள்ளிகளிலும் 'மோட்டிவேஷன் ஸ்பீச்' என்ற பெயரில் அறிவுபூர்வமான விசயங்களை சொல்லிக் கொடுப்பதற்கு மாறாக மாணவர்களை அழவைத்து, தன்னம்பிக்கை இழக்கச் செய்கிறார்கள். இதன் பின்னால், சங்பரிவார் உள்ளது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால், தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறையும்கூட அதற்கு துணை போகிறதோ? என்கிற சந்தேகம் எழாமலும் இல்லை. சமீபத்தில் ஆசிரியர் தினத்தன்று பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, 'ஒன்றிய அரசின் 'பிஎம் ஸ்ரீ (Prime Minister Schools for Rising India) எழுந்து வரும் இந்தியாவுக்கான பிரதம மந்திரியின் பள்ளிக்கூடங்கள் திட்டத்தை தமிழ்நாடு அரசு ஆரம்பத்தில் ஏற்றுக் கொண்டது; தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட மறுக்கிறது, தமிழ்நாடு அரசு தெளிவின்றி இருக்கிறது. இத்திட்டத்தை ஒட்டுமொத்தமாக வேண்டாமென்று தமிழ்நாடு அரசு ஒதுக்கிவிடவில்லை' என்றார். பிஎம்ஸ்ரீ திட்டம் தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதி. இதை ஏற்றுக் கொண்டால்தான் தமிழ்நாட்டிற்கு அரசுப் பள்ளிகள் மேம்பாட்டு நிதி 4305.66 கோடி ரூபாயை விடுவிப்போம் என்கிறது ஒன்றிய அரசு. "ஏற்கனவே தேசிய கல்விக் கொள்கை 2020 உடன் இணைந்த சர்வசிக்ஷா திட்டத்தை தமிழ்நாடு செயல்படுத்தி வருகிறது. சமக்ராசிக்ஷா திட்டத்தில் தமிழ்நாட்டிற்கு ரூ.1876 கோடி வந்துள்ளது. இப்போது பிஎம்ஸ்ரீ திட்டத்தில் கையெழுத்திட வேண்டும். தமிழ்நாட்டில் தமிழில்தான் கற்பிக்கப்படும்" என்கிறார் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திரபிரதான். பிஎம்ஸ்ரீ பள்ளிகளிலோ மும்மொழித் திட்டம். தமிழ்நாட்டிலோ இரு மொழிக் கொள்கைதான். அப்படியிருக்க, கடந்த மார்ச் மாதம் தமிழ்நாடு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்...

# புரட்சியாளர் சீனிவாசராவும் அவரது போராட்ட வழி மரபும்!



அ.சந்திரமோகன்

தஞ்சாவூர் டெல்டாவில் பெரும் நிலப்பிரபுத்துவ பண்ணைகளும் கோவில்கள், மடங்களும் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களை குவித்து வைத்திருந்தன. நிலப்பிரபுத்துவ, சவுக்கடி- சாணிப்பால் அடக்குமுறையின் கீழ் வாழ்ந்த பண்ணையடிமைகள், உழைப்புக்கேற்ற நியாயமான பங்கும், உரிமைகளும் இல்லாமல் சுரண்டபப்பட்ட குத்தகை விவசாயிகள் எனத் தஞ்சை மண்ணில் பண்ணை ஆதிக்கம் கோலோச்சிக் கொண்டிருந்த காலகட்டம் அது. இங்கு, 1940 களில் துவங்கி சுமார் இருபதாண்டு காலம் ஒன்றுபட்ட தஞ்சை மண்ணில், ஒடுக்கப்பட்ட விவசாயசமூகத்தின் விடுதலைக்காக பணியாற்றிய உன்னதமான கம்யூனிஸ்ட் தலைவர் பிஎஸ்ஆர் /BSR என்றழைக்கப்பட்ட தோழர். பி.சீனிவாசராவ்.

கர்நாடக மாநில மங்களூரு அருகே வைதீகமான பார்ப்பன பின்னணியில் பிறந்து வளர்ந்து, கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தன்னை ஒரு ஊழியராக இணைத்துக் கொண்டு, தஞ்சை மாவட்டத்தில் கட்சிப் பணிகள் ஆற்ற வந்த தோழர்.பி.எஸ்.ஆர் வாழ்க்கை வரலாறும், கீழத்தஞ்சை விவசாயிகள் எழுச்சியும் பின்னிப் பிணைந்ததாகும்.

**தஞ்சை ஜில்லாவில் நடப்பது என்ன?**

இது, தோழர். பி. சீனிவாசராவ் எழுதிய முக்கியமான பிரசுரம். அன்றைக்கு நிலவிய நிலவுடமைக் குவியல் மற்றும் கொடும் சுரண்டல், அடக்குமுறைகளை விவரிக்கிறது.

**“செல்வச் சீமான்கள்”**

*வடபாதிமங்கலம் தியாகராஜ முதலியார் 15,000 ஏக்கர், குன்னியூர் சாம்பசிவ அய்யர் 6000 ஏக்கர், சாமியப்ப முதலியார் 2500 ஏக்கர், கேடிகே எஸ்டேட் 3000 ஏக்கர், கே.எம். தேசிகர் 1500 ஏக்கர், மூலங்குடி கோபாலகிருஷ்ண அய்யர் 2000 ஏக்கர்,...சுருங்கச் சொன்னால், இந்த ஜில்லாவின் பொருளாதார வாழ்க்கையே இவர்களின் இரும்பு பிடிக்குள் அகப்பட்டு மூச்சடைத்து கிடக்கிறது. (இவர்கள்) இடும் கட்டளைகளை உடனுக்குடன் நிறைவேற்ற ஜில்லா அதிகாரிகள் ....*

**பண்ணையாட்களின் கதி**

*உழைத்து உழைத்து ஓட்டாண்டிகளான பண்ணை யாட்கள், குத்தகைதார்கள்.... பண்ணையாட்களில் பெரும்பாலோர் ஆதி திராவிடர்களே... நாள் முழுக்க வேலை செய்தால் 1/2மரக்கால் ... அதாவது பட்டணம்படியில் ஒரு படி நெல் தான் மிராசுதார் அளந்து கொடுப்பார்... வருசத்தில் மொத்த வரும்படி 160- 170 ரூபாய் தான்... மொத்த குடும்பம் உழைக்க வேண்டும்... 5 வயது கூட நிரம்பாத பச்சிளங் குழந்தைகள் மிராசுதாரர்களின் மாடுகளை மேய்க்க வேண்டும் .... தன்னுடைய குள்ளக் குடிசையை தாங்கிக் கொண்டிருக்கும் மனைக்கட்டு கூட பண்ணையாளுக்கு சொந்தமல்ல .... சிறு குற்றம் செய்தாலும்... பண்ணையாட்களின் முதுகு தோலை உறிப்பதற்கு என்றே பிரத்தியேகமான சவுக்குகளை வைத்திருக்கிறார்கள் ...”*

*1947 ல், அவர் எழுதிய இந்தப் பிரசுரம் “தஞ்சை ஜில்லாவில் நடப்பது என்ன?” , ஒரு ஆவணம், ஆய்வறிக்கை, விவசாயிகள் விடுதலை பற்றிய ஒரு செயல்திட்டம் எனலாம்.*

இத்தகைய கடுமையான நிலப்பிரபுத்துவ சுரண்டல் நிலவிய தஞ்சாவூர் மாவட்டத்தில், ஒன்றுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி திட்டப்படி, இளம் தோழர். பி.சீனிவாசராவ் அவர்களை செயலாளராக கொண்டு 1943 ல் தமிழக விவசாயிகள் சங்கம் உருவாக்கப்பட்டது. மன்னார்குடி அருகில் உள்ள தென்பரை கிராமத்தில்தான் முதலில் சங்கம் உருவானது.

**சுரண்டல்; சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள்:**

*தானியத்தை அளக்க மிராசுதாரர்கள், நிலவுடமையாளர்கள் இருவகை மரக்கால் படிகளைப் பயன்படுத்தினார்கள். குத்தகை விவசாயிகளிடமிருந்து குத்தகை/வாரம் பெற தானியங்கள் பெற, அதிக தானியம் பிடிக்கும் “தொம்பரை மரக்கால்” என்பதையும், கூலியாட்களுக்கு/பண்ணையாட்களுக்கு கூலி வழங்க குறைந்த அளவு தானியம் பிடிக்கும் “முக்கால் மரக்கால்” (கள்ள மரக்கால்) என்பதையும் பயன்படுத்தினார்கள்.*

*நிலப்பிரபுக்களுக்கு முன்னால் ஆண் கூலியாட்கள், தோளில் துண்டு போடக் கூடாது; இடுப்பில் கட்ட வேண்டும். பெண்கள் சேலையை கணுக்கால் வரை கட்டக்கூடாது, முட்டிவரை தான் அணிய வேண்டும் என்பன விதிகளாக இருந்தன.*

மிராசுதார்கள் தவறு எனக் கருதுவதை செய்யும் பண்ணையாட்களுக்கு சவுக்கடியும், வாயில் சாணிப்பால் ஊற்றுவதும் தண்டனைகளாக இருந்தன. தாழ்வு மனப்பான்மையை உருவாக்குவதும், அச்சத்தை ஏற்படுத்துவதும், போராட்ட உணர்வை மழுங்கடிப்பதும் இதன் நோக்கமாகும்.

அச்சத்திலிருந்து மக்களை விடுவிக்க, இடுப்பில் துண்டு கட்டிய மக்களைத் தோளில் சிவப்பு துண்டு போடச் சொல்லி எதிர்ப்புணர்வை ஊட்டினார்கள், கம்யூனிஸ்டுகள். பி.எஸ்.ஆர் கூலி உயர்வுக்கு எதிராக மட்டுமல்ல, சவுக்கடி சாணிப்பாலுக்கு முடிவு கட்ட, தோளில் துண்டு, கணுக்கால் வரை சேலை எனப் பல்வேறு உரிமைகளுக்காகவும் செயல்பட்டார்.

எதிர்த்துப் போராடும் பண்ணைத் தொழிலாளர், குத்தகை விவசாயிகளை அடக்கி ஒடுக்க, விவசாயிகள் சங்கத்தை நசுக்க மிராசுதார்கள் துடித்தார்கள். அவர்களுக்கு ஆதரவாக கிராமம் கிராமமாக ரிசர்வ் போலீஸ் லாரிகள் வட்டமிட்டு சுற்றி வந்தன. இதற்கு எல்லாம் அஞ்சாத பல்வேறு போராட்டங்கள், கலகங்களின் தொடர்ச்சியாக, விவசாயிகள் சங்கம் - நிலவுடைமையாளர்கள் - அரசாங்கம் இடையே முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் உருவானது.

1944ல், களப்பால் ஒப்பந்தம் உருவானது. அதில், சவுக்கடி _ சாணிப்பால் நிறுத்த வேண்டும் என முடிவானது. 1944 டிசம்பரில் கலெக்டர் இஸ்மாயில் கான் தலைமையில், மன்னார்குடி ஒப்பந்தம் ஏற்பட்டது. முத்திரை மரக்கால் அளவு என முடிவானது.

பி.எஸ்ஆர் தலைமையில் தமிழக விவசாயிகள் இயக்கம், பண்ணையடிமைகளாக இருந்த விவசாயத் தொழிலாளர், சுரண்டப்பட்ட குத்தகை விவசாயிகள் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தது.

**ஒடுக்கப்பட்ட மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்தவர் பிஎஸ்ஆர்!**

கீழத் தஞ்சையிலே விவசாயத் தொழிலாளர் பாடி வந்த வயல் பாட்டு பின்வருமாறு இருந்தது.

“கட்டும் சேலையை முட்டிவரை கட்டச் சொன்னது யாரய்யா ஆண்டை, அய்யா என்று கூறய்யா…

கணுக்கால் வரை கட்டச் சொன்னது யாரய்யா, நம்ம சாமி பிஎஸ்ஆர் என்று கூறய்யா…”

பிஎஸ்ஆர் பிறப்பிலான தனது சாதியை தூக்கியெறிந்து விட்டு, ஏழை மக்களோடு… அவர்கள் சாப்பிட்டு வந்த புழுத்த அரிசி, கஞ்சி, நண்டு, நத்தை என உண்டு அவர்களுடான வாழ்க்கையையே தனது குடும்ப வாழ்க்கையாக அமைத்துக் கொண்டார்.

நிலப்பிரபுக்களின் கொலை வெறி அச்சுறுத்தல்கள், வழக்குகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மீதான தடையின் காரணமாக ஏற்பட்ட தலைமறைவு வாழ்க்கை, விவசாயிகள் சங்கத்தை பேரியக்கமாக கட்டி எழுப்புவது என்பதாக பிஎஸ்ஆரின் அரசியல் பயணம் இருந்தது. மக்களுக்காகவே உழைத்த அவர் தனது உடல்நலனை பொருட்படுத்தவில்லை. 30.9.1961 அன்று அதிகாலை 5 மணியளவில், தஞ்சாவூரில் தனது 54 வது வயதில் இறந்தார்.

தஞ்சாவூர் துவங்கி திருத்துறைப்பூண்டி வரை, 50 கி.மீ க்கும் கூடுதலாக வழிநெடுக, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள், கூலி விவசாயத் தொழிலாளர் அவருக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். திருத்துறைப் பூண்டியில் 25,000 க்கும் மேற்பட்டோர் அணிதிரண்டிருக்க, இரவு 10.30 மணியளவில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

தமிழகத்தில், தஞ்சை டெல்டாவில் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் தலித் குடும்பங்களில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சீனிவாசராவ் என்ற பெயரோடு இன்றைக்கும் வாழ்ந்து கொண்டு இருப்பது தோழர். பி.சீனிவாசராவ் ஒரு தலைசிறந்த கம்யூனிஸ்ட்டாக, மக்கள் தலைவராக வாழ்ந்துள்ளார் என்பதற்கு சாட்சியமாக திகழ்கிறது.

**போராட்ட வழிமரபைத் தொடர்வோம்!**

தோழர் சீனிவாசராவ் மறைந்து 63 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது போராட்ட மரபை நினைவுகூரும் போது தோழர்கள் சந்திரகுமார் -சந்திரசேகர், சுப்பு, பாலன் போன்ற தியாகிகளின் போராட்ட மரபுகளையும் நினைவுகூர்வது பொருத்தமானதாகும்.

சீனிவாசராவ் வாழ்ந்த தமிழ்நாடு, பல மாற்றங்களைக் கண்டது. ‘70களின் பசுமைப்புரட்சி உள்ளிட்ட பொருளாதார, சமூக, அரசியல் மாற்றங்களின் விளைவாக பண்ணையடிமைகள் விவசாயத் தொழிலாளராக உருவெடுத்தனர். பண்ணையார்கள், விவசாய முதலாளிகளாக, குலக்குகளாக மாற்றம் பெற்றனர். கிராமப்புற அதிகாரம் குலக்குகள் கைக்கு மாறியது. விவசாயத்தொழிலாளரை பொருளாதாரச் சுரண்டலுக்கு அடிமைப்படுத்துவதோடு, தலித்துகளாக இருந்த அவர்களது சமூக கவுரவத்தை, அரசியல் உறுதியை நொறுக்குவதும் கோபாலகிருஷ்ண நாயுடு தலைமையிலான நெல் உற்பத்தியாளர் சங்க புதிய மிராசுதார்களின் நோக்கமாக இருந்தது. இதன் விளைவாக நடத்தப்பட்ட வெண்மணி படுகொலை இந்தியாவையே உலுக்கியது.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

# “அம்பேத்கர் சிந்தனையின்படி கல்வி என்பது சமூக நீதியை அடைவதற்கான; சமூகத் தட்டுகள் இடம் மாறுவதற்கான ஓர் ஆயுதம்”

**(சிபிஐ எம்எல் கட்சியின் பொதுச் செயலாளர் திபங்கர் சிறப்புப் பேட்டி பிடிஐ யின் 4 ‘நாடாளுமன்றத் தெரு’ சேனலில் வெளிவந்தது)**

(ஆங்கிலத்தில் பேட்டி: https://youtu.be/lLnosZxjpXw)

**தமிழாக்கம்: சி. மதிவாணன்**

பகுதி –4 சென்ற இதழ் தொடர்ச்சி...



**தேர்தல் முடிவுகள் குறிப்பாக, பீகாரில் இந்தியா அணிக்கு ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது. இன்னும் சிறப்பான வெற்றியை எல்லோரும் எதிர்பார்த்தார்கள். எது தவறாகிப்போனது? (சமூக/அரசியல்) சக்திகள் எப்படி திசை தவறிப்போயின? மற்றுமொரு கேள்வி, வரும் சட்டமன்றத் தேர்தலின் முடிவுகள் எப்படி இருக்கும்?**

சில அம்சங்கள் தவறாகிப் போயின என்றுதான் நினைக்கிறேன். தொகுதி பங்கீடு குறித்து எனக்கு மிகவும் அதிருப்தி இருக்கிறது. வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்ததிலும் அப்படித்தான். இதனால் சில தொகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டது. உதாரணமாக பூர்னியா. இந்த தொகுதியை பப்பு யாதவ் கைப்பற்றினார். அங்கே, இந்தியா கூட்டணியின் ராஷ்டிரிய ஜனதாதள வேட்பாளர் 30 ஆயிரத்திற்கும் குறைவான வாக்குகளே பெற்றார் என்ற நினைத்துப் பார்க்க முடியாத விளைவு ஏற்பட்டது. இது இரண்டு அணிகளுக்கு இடையே நடந்த போட்டி. இதில் ராஷ்டிரிய ஜனதாதள வேட்பாளர், முழுக் கட்சியும் அவருக்கு ஆதரவாக இருந்தபோது, எப்படி இவ்வளவு குறைவான வாக்குகளைப் பெற முடியும்? அதன் தொடர் விளைவால் அராரியா, மதேபுர் உள்ளிட்ட பல தொகுதிகள் பாதிப்புக்கு ஆளாகின.

சிவான் எங்களுக்கு வலுவான தொகுதி. அங்கே நாங்கள் வெற்றி பெற வாய்ப்புகள் மிக அதிகம். சிவான் தொகுதியில் எம்எல் வேட்பாளர் போட்டியிட்டிருந்தால் சிவான் தொகுதியை வென்றிருக்க முடியும் என்று பல வட்டாரங்களிலிருந்தும் எனக்கு தகவல்கள் வந்தன. அப்படி வென்றிருந்தால், சிவான், சாப்ரா, அப்புறம் மகராஜ்கன்ஞ், ஏன் கோபால்கஞ்ச் உள்ளிட்ட சுற்றியுள்ள தொகுதிகளிலும் வெற்றி உத்தரவாதம் ஆகியிருக்கும். இவையெல்லாம் தவிர்த்திருக்கக்கூடிய சில தவறுகள். இந்தத் தவறுகளால் சில தொகுதிகள் கையை விட்டுப் போயின. அதைவிட முக்கியமான பிரச்சனை, வடக்குப் பீகாரில் நாங்கள் ஏன் சிறப்பான வெற்றிபெற முடியவில்லை என்பது.

சட்டமன்றத் தேர்தல் என்று எடுத்துக்கொண்டால் நாங்கள் சிறப்பாக செயல்பட்டது தெற்கு பீகாரும், சீமாஞ்சல் பிராந்தியத்தின் ஒரு பகுதியும்தான். ஆனால், வடக்குப் பீகாரின் மிதிலா, சம்பரன், சரன் பகுதி, மேலும் கோஷி ஆகிய பகுதிகளில் தேசிய ஜனநாயக முன்னணி சற்று சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் என்ன தவறு நடந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். தெற்கு பீகாரில் இருக்கும் சமூக ஒற்றுமை முன்சொன்ன இடங்களில் இல்லை என்பதுதான் வடக்கு பீகாரில், எங்களின் பலவீனமான அம்சமாக இருந்திருக்கிறது என்று எண்ணுகிறேன். அங்கே மிகப் பெரிய அளவுக்கு சமூகப் பிளவு இருக்கிறது. மற்றொரு காரணியாக நிதிஷ் குமார் இருக்கலாம். பாஜகவிற்கு எந்தப் பாதிப்பும் இருக்காது, என்று பலரும் நினைத்துக்கொண்டிருந்தனர். நிதிஷ் குமாருக்கும் எல்ஜேபி கட்சிக்கும் மிக அதிகமான பாதிப்பு ஏற்படும் என்றும் நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக அமைந்தன. பாஜகவுக்குத்தான் பீகாரில் மிகப்பெரிய அளவுக்கு இழப்பு ஏற்பட்டது. நிதிஷ் குமாருக்கு நான்கு தொகுதிகள் இழப்பு. எல்ஜேபி க்கு எந்த இழப்பும் ஏற்படவில்லை. தேர்தல் கருத்துக்கணிப்பு செய்தவர்களில் யாரெல்லாம் சரியாகக் கணித்தார்களோ அவர்களே கூட பீகாரில் சரியானபடி கணிக்கவில்லை.

நிதிஷ் குமாரின் மரபு மிகவும் தாக்குப் பிடிக்கும் ஒன்றாக இருக்கிறது. நிதிஷ் மரபுக்கு பெண்கள் கூடுதல் ஆதரவு அளிப்பவர்களாக இருக்கிறார்கள் என்று சிலர் சொல்கின்றனர். மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களும் அவ்வாறுதான் இருக்கிறார்கள். இப்பிரச்சனைகளைக் களைய நிறைய வேலை செய்ய வேண்டியிருக்கிறது. வரும் சட்டமன்றத் தேர்தலைச் சந்திப்பது என்று வரும்போது, மாற்றம் கண்டுவரும் நிலையில் பீகார் இருப்பதைக்

கவனத்தில் கொள்ள வேண்டும்.

ராம் விலாஸ் பஸ்வான் இறந்துபோனார். சுசில் மோடியும் மறைந்தார். லாலு யாதவும் செயல்துடிப்புடன் இல்லை. அவர்களின் காலத்தைச் சேர்ந்த நிதிஷ் குமார் மட்டுமே துடிப்புடன் இருக்கிறார். எனவே, நாம் பீகார் அரசியலின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கிறோம். இது ஒரு தலைமுறை மாற்றம். இந்த தலைமுறை மாற்றம் அனைத்து கட்சிகளின் நிர்வாக அமைப்புகளிலும் நடந்துகொண்டிருக்கிறது. எனவே, இந்தியா அணியின் மேலுள்ள நல்ல எண்ணம் நாடாளுமன்றத் தேர்தலைக் காட்டிலும் வரும் சட்டமன்றத் தேர்தலில் கூடுதலாக செயல்படத் துவங்கும் என்று பலரும் சொல்கிறார்கள், நானும் அப்படித்தான் கருதுகிறேன்.

**மின்னணு வாக்கு எந்திரங்களில் பதிவான வாக்குகள் குறித்து தாமதமான அறிவிப்புகள், பதிவான வாக்குகளின் எண்ணிக்கைக்கும் எண்ணப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கும் முரண்பாடு என்று நிறைய பிரச்சனைகள் இருக்கின்றன. இதனை எதிர்க்கட்சிகள் எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப் போகிறீர்கள்?**

தேர்தலுக்கு முன்பு நாங்கள் ஒரு பொதுவான கோரிக்கைக்கு வந்து சேர்ந்தோம். விபாட் துண்டுகளை 100 சதம் எண்ண வேண்டும் என்று கோரினோம். (விபாட் என்பது வாக்காளர் அளித்த வாக்கு அவர் விருப்பப்படியே பதிவாகி இருக்கிறதா என்பதைக் காட்டும் துண்டுச் சீட்டாகும்) அதனைச் சரிபார்க்கவில்லை என்றால் விபாட் என்ற பெயரே தப்பான பெயராகிவிடுகிறதல்லவா? வாக்காளர் சரிபார்க்கவில்லை என்றால், உண்மையான பதிவு பற்றிய துண்டுச் சீட்டு கிடைக்கவில்லை என்றால் அதன் பயன்தான் என்ன?

கெடுவாய்ப்பாக உச்சநீதிமன்றம் எங்கள் கருத்துக்கு உடன்படவில்லை. தேர்தல் ஆணையமும் உடன்படவில்லை. எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால், வாக்குச் சீட்டு முறைக்கு நாடு திரும்பியாக வேண்டுமென்பது எமது கட்சியின் அரசியல் நிலைப்பாடாக இருக்கிறது.

இக்கருத்தை பல்வேறு அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொள்கின்றனர். வாக்குச்சீட்டு கோரிக்கைக்கும் தேர்தல் முடிவுகளுக்கும் சம்பந்தம் இல்லை. தோல்வியடைந்தவர்கள் மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தின் மீது பழிபோடுகிறார்கள் என்று பாஜகவைச் சேர்ந்தவர்கள் சொல்வது வழக்கம். 'ஒவ்வொருமுறை நீங்கள் தோற்கும்போதும் இவ்வாறு பழிபோடுகிறீர்கள்' என்று அவர்கள் சொல்வார்கள். அதுவல்ல விஷயம். வெளிப்படைத்தன்மை இருந்தால்தான் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியும். வெளிப்படைத்தன்மை இல்லையேல் நம்பிக்கை எப்படி வரும்?

பிரச்சனையை முன்னெடுத்துச் செல்வதற்கான வழி என்ன? தேர்தல் ஆணையத்தை அணுகியாகிவிட்டது. உச்சநீதிமன்றத்துக்கும் போயாகிவிட்டது. அடுத்து இப்பிரச்சனையை எப்படி முன்னெடுப்பது?

மக்களின் எழுச்சிதான் சாத்தியமான வழியாக இருக்கிறது. மக்கள் தங்கள் கருத்துகளைச் சொல்லும்போது, அரசு நிர்வாகக் கட்டமைப்புதான் அதற்குத் தகுந்த முறையில் வினையாற்ற வேண்டும். பல தொகுதிகளைச் சேர்ந்த மக்கள் தங்களின் வாக்குகளுக்கும் தேர்தல் முடிவுகளுக்கும் பொருத்தம் இருப்பதாக நம்பவில்லை. எனவே, இதுபோன்றே தொடர்ந்து பல இடங்களிலும் நடக்கும்போது, தேர்தலில் தில்லுமுல்லு நடக்கிறது என்று வலுவாகக் கருதும்போது, ஒரு ஜனநாயக நாட்டில் வெகுமக்களின் எதிர்ப்பு ஏற்படும் என்று நீங்கள் கருத வாய்ப்பிருக்கிறது. அது தப்பான சிந்தனை என்று நான் கருதவில்லை. இதுபோன்ற ஒன்று கேள்விப்படாத ஒன்றும் இல்லை. எனவே மக்கள், தங்களின் கருத்துகளுக்கு (நிர்வாக கட்டமைப்பு) செவிசாய்க்கப்படுவதைச் சாதிப்பார்கள். அப்படிச் செய்வது மட்டுமே அரசியல் நிர்வாகக் கட்டமைப்பு பதில் வினை ஆற்றச் செய்வதற்கான ஒரே வழியாக இருக்கும்.

**துவக்கத்திலிருந்தே நீட் தேர்வுக்கு எதிராக நிற்கும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருக்கிறது.**

**சமீபத்தில் நீட் பற்றிய சர்ச்சை எழுந்ததை நீங்கள் கவனித்திருப்பீர்கள். இது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? இது தொடர்பாக உங்கள் கட்சியின் கோரிக்கை என்ன? கல்வி முறையை காவிமயமாக்க ஒருமுகப்பட்ட முயற்சி நடக்கிறது என்று நீங்கள் நம்புகிறீர்களா?**

முழுமையாக நம்புகிறேன். வாஜ்பேயி காலத்திலிருந்தே, இன்னும் சொல்லப்போனால் அதற்கு முன்பிருந்தே, காவிமயமாக்கல் நடந்து வருகிறது. மக்களின் மூளையைக் கட்டுப்படுத்துவது என்பதுதான் பாஜகவின், ஆர்எஸ்எஸ்சின் மையமான வேலைத்திட்டமாகும். நாட்டின் கல்விசார் விஷயங்கள் மீது, கல்விச் சூழல் மீது, இலக்கிய உலகின் மீது தாக்கம் விளைவிப்பது, ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது அவர்களின் மையமான திட்டமாகும். இது அவர்களின் இரண்டாவது இயற்கையான தன்மையாகும்; அது அவர்களின் மரபணுக்கூறிலேயே பொதிந்துள்ள செய்தியாகும்.

மேலும், காவிமயமாக்கப்படுவது என்பதற்கு கூடுதலாக, முழுமையான தனியார்மயமாக்கமும்

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நான் அதனை கல்வியை 'மேட்டுக்குடி மயமாக்கல்' என்று குறிப்பிடுவேன். அம்பேத்கர் சிந்தனையின்படி, கல்வி என்பது சமூக நீதியை அடைவதற்கான, சமூகத் தட்டுகள் இடம் மாறுவதற்கான ஓர் ஆயுதம். இது மக்களின் வாழ்க்கையில் கண்ணுக்குத்தெரியும் முன்னேற்றத்தைக் கொண்டுவரும். முற்போக்கான நிலச்சீர்திருத்தம், செல்வத்தைப்பங்கீடு செய்வது நடக்க வேண்டும். தற்போது இவையெல்லாம் மக்களுக்கு மறுக்கப்படுகிறது. அதற்கு மாறாக, அனைத்தையும் மையப்படுத்துவது நடக்கிறது.

துவக்கத்திலிருந்தே நீட் தேர்வுக்கு எதிராக நிற்கும் மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு இருக்கிறது. வேறு சில தென் மாநிலங்களும், ஓரளவுக்கு மேற்கு வங்கமும் கூட நீட்தேர்வை எதிர்க்கின்றன. அவர்கள் நீட் என்ற கருத்தாக்கத்தையே எதிர்க்கிறார்கள். இப்போது வெளிவந்த ஊழல்களுக்கு முன்பிருந்தே அவர்கள் நீட் தேர்வை எதிர்த்து வருகிறார்கள்.

உதாரணமாக ஒரே தேசம், ஒரே தேர்வு என்பதைச் சொல்லலாம். ஒரே தேசம்; ஒரே தேர்தல் என்றாலும் சரி, ஒரே தேசம்; ஒரே மொழி என்றாலும் சரி, ஒரே தேசம்; ஒரே கட்சி அல்லது ஒரே தேசம்; ஒரே தலைவர், அல்லது ஒரே தேசம்; ஒரே தேர்வு என்றாலும் சரி, இவை அனைத்துமே கெட்ட கருத்துகள். இவை மிகவும் மோசமான விளைவுகளையே உண்டாக்கும்.

கல்வியைத் தனியார்மயமாக்குவது, கல்விக்குத் தடையாகவே போய்முடியும். தனியார்மயம், வணிகமயம், காவிமயம் என்ற மூன்றும் ஒன்றை ஒன்று சார்ந்தவை. தற்போது மாணவர்கள் என்ன கோருகிறார்களோ அதுதான் எங்கள் கோரிக்கையும்! மாணவர்கள் நடந்து முடிந்த நீட் தேர்வை மறுபடியும் நடத்தும்படி கோருகிறார்கள். நாங்களும் (ஊழலால் பாதிக்கப்பட்ட) நீட் தேர்வை மறுபடியும் நடத்த வேண்டுமெனக் கோருகிறோம். அவர்கள், தேசிய தேர்வு முகமையை கலைக்கும்படி கோருகிறார்கள். இறுதியாக நீட் தேர்வுமுறையையே குப்பைக் கூடைக்கு அனுப்ப வேண்டும் என்கிறார்கள்.

அடுத்த இதழில் முடியும்

5 ஆம் பக்க தொடர்ச்சி...

வெண்மணிக்குப் பிறகு, 'வர்க்கப் போராட்டங்களால் சமூக ஒடுக்குமுறைகள் தானே அகன்றுவிடும்' என்ற சிந்தனைப் போக்கு தமிழ்நாடு இடதுசாரி இயக்கத்தில் மேலோங்கி, வர்க்கமா? சாதியா? என்ற கருத்துப் போருக்கு களம் அமைத்துக் கொடுத்தது.

'80 களில் கிராமப்புற ஏழைகளை அணிதிரட்டிய மாலெ கட்சி, வர்க்கம் சாதியாக இருப்பதையும் சாதிக்குள் வர்க்கம் இருப்பதையும் புரிந்து உழைப்புச் சுரண்டலையும் சமூக ஒடுக்குமுறையையும் ஒருசேர எதிர்த்துக்களமாடியது. மார்க்சிய - லெனினிய அரசியலில் தேர்ந்த பள்ளி ஆசிரியரான தோழர் சந்திரகுமார் மாணவர்களுக்கும், மக்களுக்கும் சுயமரியாதையை கற்றுக் கொடுத்தது மட்டுமல்லாமல், மேலத்தஞ்சை ஆடுதுறை வட்டார கிராமங்களில், கூலி உயர்வு போராட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களை அணிதிரட்டுவதில் முன்னோடிப் பாத்திரம் வகித்தார். இந்த வர்க்கப் போராட்டத்தில், சமூக ஒடுக்குமுறையை எதிர்த்த போராட்டத்தில், சந்திரசேகரோடு, கள்ளர் சமூகப் பின்னணி கொண்ட தோழர் சந்திரசேகர் தோளோடு தோள் நின்று களமாடினார்.

'90 களில், சிவகங்கை மாவட்டத்தின் நாடு கட்டமைப்பு, சாதியாதிக்க குலக்குகளின் அதிகாரம், தலித்துகளின் சமூக சமத்துவத்தை - வழிபாட்டு உரிமையை மறுத்தது; அந்த வழிபாட்டு உரிமையையே போராட்ட வழிமுறையாக்கி, குலக் அதிகாரத்தை எதிர்த்து முறியடித்தவர் தோழர் மாடக்கோட்டை சுப்பு. பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராகவும் போராடினார். பறையடிப்பதில், தலித்துகளின் இருபிரிவினர் மத்தியில் வேறுபாடுகள் உருவானபோதும் கூட, அவர்களை உழைக்கும் விவசாயிகள் சங்கத்தில் வர்க்க பொருளாதார கோரிக்கைகளின் கீழ் ஒன்றுபடுத்த பாடுபட்டார்.

'80 களின் துவக்கத்தில், தருமபுரியில் நிலவிய மிராசுதாரர்களின் கொடூர கந்துவட்டிச் சுரண்டலை தகர்த்தவர் பாலன். மக்கள் மத்தியில், சமூக சமத்துவம் விதையூன்றுவதற்கு, தலித்துகள் - வன்னியர்களிடையே ஆயிரக்கணக்கான சாதிமறுப்புத் திருமணங்கள் நடைபெறுவதற்கு கம்யூனிஸ்ட் புரட்சியாளர்கள் பாலன் காட்டிய வழியில் முன்சென்றனர்.

தோழர் சீனிவாசராவுடன், அவர் தொடங்கி வைத்த போராட்ட மரபை மார்க்சிய-லெனினிய வழியில் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு முன்னெடுத்துச் சென்ற செப்டம்பர் மாதத்தில் தியாகிகளான தோழர்கள் சந்திரசேகர் -சந்திரகுமார், தோழர் சுப்பு, தோழர் பாலன் ஆகியவர்களை நினைவு கூர்வது காலப் பொருத்தமுடையதாகும்.

தோழர் சீனிவாசராவ் முன்னெடுத்த புரட்சிகரமான விவசாயிகள் இயக்கத்தின் மூலமாக, ஒடுக்கப்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் மீதான சவுக்கடி - சாணிப்பால் கொடுமைகள் மறைந்துவிட்டாலும், ஆயிரக்கணக்கான குத்தகை விவசாயிகளின் கோரிக்கைகள் முழுமையாக நிறைவேறாமல் காத்துக் கிடக்கின்றன.

# சுற்றுச்சூழல், காலநிலை நெருக்கடி (பகுதி 5)

*(2023 பிப்ரவரி 16-20ல் பாட்னாவில் நடைபெற்ற 11வது கட்சிக் காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்)*

*20.* பருவமழையின் சுழற்சிக்கும் பல்லுயிர் சூழலுக்கும் மிகக் கடுமையான பாதக விளைவுகளை ஏற்படுத்தி, மோசமான சமூகப் பொருளாதார சவால்களையும் பேரழிவு மிக்க சூழலியல் சேதத்தையும் ஏற்படுத்தக்கூடிய, தேசிய ஆறுகள் இணைப்புத் திட்டம் வடிவம் பெறத் தொடங்கிவிட்டது. யமுனை ஆற்றின் துணை ஆறுகளான கென், பெட்வா இரண்டையும் இணைப்பதை அமல்படுத்துவதற்கும், அதற்கான நிதிக்கும் ஒன்றிய அரசாங்கம் அனுமதி வழங்கிவிட்டது. முன் வைக்கப்பட்டுள்ள கென்-பெட்வா ஆறுகள் இணைப்புத்திட்டத்தால், மத்தியப் பிரதேசத்திலுள்ள பன்னா புலிகள் சரணாலயத்தின் கருப்பகுதியான இடத்திலுள்ள பெரும்பகுதிகள் மூழ்கும் என ஆய்வுகளின்படி தெரிய வந்துள்ளது. அதன்மூலம், புலிகளும் அதன் முக்கிய உணவினங்களான புள்ளிமான்கள், கடமான்கள் ஆகியன பெரும் அழிவினைச் சந்திப்பதற்கு வழி வகுக்கும். இந்தத் திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள 30 ஆறுகள் இணைப்புகளில் (தீபகற்ப பகுதியின் கீழ் 16 ம், இமயமலை பகுதியின் கீழ் 14 ம்) இதுதான் அமல்படுத்தப்படும் முதல் இணைப்பு ஆகும். இது ஒட்டுமொத்தமாக நம்முடைய ஆறு அமைப்புகளை மாற்றியமைக்கும். பெருமளவு இடம்பெயர்தல், வாழ்வாதார இழப்புகளின் வழியாகவும், காட்டு வெளிகள், பல்லுயிர் சூழல் இழப்புகளின் வழியாகவும் நாடு முழுவதும் பேரழிவுகளை ஏற்படுத்தும். அணைகளின் எண்ணிக்கை, திசை திருப்பும் தடுப்பணைகள், கால்வாய்கள் ஆகியன ஆற்றின் இயற்கையான ஓட்டத்தை பாதித்து கழிமுகங்களின் இயற்கையான உயிர்த்துடிப்பை ஆபத்துக்குள்ளாக்கும். பெருஞ்செலவு பிடிக்கிற இத்திட்டம் காலநிலை நெருக்கடியை இன்னும் அதிகரிக்கும். காடுகளின் அழிவு என்பது அடிப்படையில் மிகவும் அரிதான கரிம புதைகுழிகளின் அழிவாகும். கூடுதலாக, வெப்பமண்டல பகுதிகளின் நீர்த்தேக்கங்கள் மீத்தேன், கரியமில வாயுக்களை அதிக அளவில் வெளியேற்றும் என்பது நிறுவப்பட்ட அறிவியல் உண்மையாகும். ஆற்றுநீரின் மீது மக்களுக்கு உள்ள உரிமையை கைப்பற்றி, கார்ப்பரேட் நலன்களுக்காக கடத்தும் முயற்சியாகும்.

தற்போது குஜராத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பார் டாப்பி நர்மதை ஆறு இணைப்புத் திட்டம் வால்சாட், டாண்ட், டாப்பி மாவட்டங்களில் வாழும் பழங்குடி மக்களுக்குப் பெரும் அபாயத்தை ஏற்படுத்தப்போகிறது. இந்த இணைப்புத் திட்டமும், இத்திட்டத்தின்படி அமைக்கப்படவிருக்கும் பெரிய அணையும் செயல்பாட்டுக்கு வரும்போது, பழங்குடி மக்களின் ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலமும், கிராமங்களும் நீரில் மூழ்கிவிடும். இப்பகுதியின் பழங்குடி மக்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் திரண்டு, இந்த இணைப்புத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த போதும், பேரழிவு ஏற்படுத்தும் இந்த இணைப்புத் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தியே தீருவதென்று பிடிவாதமாக இருக்கிறது.

*21.* எளிதில் மாற்றமடையக்கூடிய இமயமலை நிலப்பரப்பில், குறிப்பாக, உத்தரகண்ட், இமாச்சலப் பிரதேசத்தில் பேரழிவு தரும் நிலச்சரிவுகள்பன்மடங்கு அதிகரித்துள்ளதாக சமீபத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இமயமலை போன்ற நிலப்பரப்புகளில், மேக வெடிப்புகளின் காரணமாக நிலச்சரிவுகளும் திடீர் வெள்ளப் பெருக்குகளும் சாதாரணமானவைதான்; என்றாலும், இத்தகைய பேரழிவுகளின் எண்ணிக்கையும் அளவும் அதிகரித்துக்கொண்டு செல்வதற்கு, ஆளும் வர்க்கத்தால் மேற்கொள்ளப்படுகின்ற சீர்குலைவு வளர்ச்சி நடவடிக்கைகளே காரணமாகும். சுற்றுலாவின் பெயரால் போடப்படும் சாலைகளின் அபரிமிதமான வளர்ச்சி, அணைகள் கட்டுதல், நீர் மின் திட்டங்கள், காலநிலை மாற்றத்தின் விளைவுகள் ஆகியவைதான் இத்தகைய பேரழிவுகளின் எண்ணிக்கையும் அளவும் அதிகரிப்பதற்கு முக்கியமான காரணமாகும். நகர்ப்புரங்களை மையமாகக்கொண்ட தொழில்களின் வளர்ச்சிக்காகவும், சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்காகவுமே உள்ளூர் மக்களின் வாழ்வு, வாழ்வாதாரத்தை விலையாகக் கொடுத்து இந்த வளர்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இமயமலை நகரமானஜோசிமத் புதைந்துபோனதன் சமீபத்திய நெருக்கடி, குடியிருப்புகளிலும் மற்ற கட்டிடங்களிலும் கடுமையான விரிசல்கள் ஏற்பட்டது, அரசாங்கத்தின் சரியான புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதுவும் இல்லாமல் பல குடியிருப்புவாசிகள் காத்திரமான விதத்தில் நகரத்திலிருந்து வெளியேற்றப்பட்டது ஆகியவை நொறுங்கிக் கொண்டிருக்கும் இமயமலை உடலியலின் மீது பொறுப்பற்ற மனிதத் தலையீடு நடந்தால் என்ன நடக்கும் என்பதற்கான பளிச்சென தெரியும் உதாரணங்களாகும். அய்எஸ்ஆர்ஓ வெளியிட்ட செயற்கைகோள் படங்கள் வெறும் 12 நாட்களிலேயே நகரம் 5.4 சென்டிமீட்டர் அளவு புதைந்து விட்டதை வெளிக்காட்டின. (பின்னர் அவை மர்மமான முறையில் இணையதளத்திலிருந்துநீக்கப்பட்டுவிட்டன).சுற்றுலா நோக்கங்களுக்காக கட்டுப்பாடற்ற விதத்தில் நகரத்தில் சாலைகளும் கட்டிடங்களும் கட்டப்பட்டதுவே இந்தப் பேரழிவுக்கான மிகப்பெரிய காரணமாகும். அருகிலேயே தபோவன் நீர்மின் திட்டத்துக்கான

அகழாய்வு மேற்கொண்டு நிலத்தடி நீர் வெளியேற்றப்பட்டதாலும் நிலச்சரிவு ஏற்பட்டதாலும் இவ்வளவு வேகத்தில் ஜோசிமத் புதைய காரணமாய் அமைந்துவிட்டதென்று பலவிஞ்ஞானிகளும் சுற்றுச்சூழல்வாதிகளும் செயற்பாட்டாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

விடுதலை பெற்ற தொடக்க நாட்களிலிருந்து மேற்கொள்ளப்படும் பெரிய அணைத் திட்டங்களால் ஏற்பட்ட பேரிடர்களில் இருந்து இந்திய ஆளும் வர்க்கம் எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. பெரிய அணைகள், ஏற்கனவே இந்த அணைகளுக்கு அருகிலுள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களை இடம்பெயரச் செய்து, உள்ளூர் வனங்களையும் உயிர்ச்சூழலையும் நாசமாக்கிப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. நர்மதை நதி திட்டத்திற்கு எதிராக பழங்குடியினர், விவசாயிகள், சூழலியலாளர்களின் பல பத்தாண்டு கால போராட்டத்தைப் புறக்கணித்து அந்த ஆற்றின் மீது கட்டப்பட்ட சர்தார் சரோவர் அணையை பிரதமர் நரேந்திர மோடி 2017ஆம் ஆண்டு பெருமையுடன் திறந்து வைத்தார். விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதியும், குஜராத், மத்திய பிரதேசம், மஹாராஷ்டிரா மக்களுக்கு மின்சார வசதியும் வழங்கவே நர்மதை ஆற்றில் அணைகள் அமைக்கப்படுகின்றன என்று சொல்லப்பட்டது. உண்மையில் சர்தார் சரோவர் அணையிலிருந்து தண்ணீர் தொழிற்சாலைகளுக்குதான் அனுப்பப்படுகிறது; ஆனால், குஜராத்தின் வறட்சி பாதிக்கும் பகுதிகளின் விவசாயிகளோ நீருக்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள் என செய்திகள் சொல்கின்றன.

22. உலகம் முழுவதும் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள், எளிதில்பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள், குடிமைச் சமூக ஆர்வலர்கள், மாணவர்கள், இளைஞர்கள் தலைமையில் போராட்டக் குரல்களும் அமைப்பாக்கப்பட்ட போராட்டங்களும் இந்த சுரண்டல் மாதிரிக்கு சவால் விடுகின்றன; அவை, அரசாங்கங்களிடமிருந்தும் பெருநிறுவனங்களிடமிருந்தும் நடவடிக்கைகளைக் கோருகின்றன. சுரங்க நிறுவனங்கள், ஆலைகளின் லாபவெறியினால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளை எதிர்த்து இந்திய மக்களும் போராடிக்கொண்டிருக்கின்றனர். ஒடிசாவில் பரிந்துரைக்கப்பட்டுள்ள வேதாந்தா ஆலையின் காரணமாக ஏற்பட வாய்ப்புள்ள ஆதிவாசிகளின் இடப்பெயர்ச்சியையும், சுற்றுச்சூழல் சீர்கேட்டையும் எதிர்த்து நடந்த, நியாமகிரி மலை பழங்குடிகளின் உத்வேகமளிக்கும் போராட்டம், சுற்றுச்சூழல் ரீதியில் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய ஒடிசாவின் கடற்கரை பகுதியில் பரிந்துரைக்கப்பட்டுள்ள போஸ்கோவின் பெருந்தொழிற்சாலைக்கு எதிராக நடந்த ஜகத்சிங்பூர் மக்களின் வெற்றிகரமான இயக்கம், வேதாந்தாவின் மாசுபடுத்தும் தாமிர ஆலைக்கு எதிராக தமிழ்நாட்டின் தூத்துக்குடி மக்கள் நடத்திய துணிச்சல்மிகுந்த போராட்டம், இயற்கையோடு இணைந்து வாழும் பழங்குடிகள், அழிவு ஏற்படுத்தும் அதானியின் நிலக்கரி சுரங்கங்களுக்கு எதிராக நடத்திக்கொண்டிருக்கும் போராட்டங்களும் அவர்களின் மற்ற பிற போராட்டங்களும் இந்தியாவில் தொழில்நிறுவன சூறையாடலுக்கு எதிரான இந்தியாவின் புகழ்வாய்ந்த மரபை முன்னெடுத்துச் செல்கின்றன. தியோச்சாபாச்சமி, ஆரவல்லி மலைகள், அயோத்தி மலைகள், பக்ஸ்வாஹா, திலாபனி மலை, ஆரே, தெகிங்பட்கை, விழிஞ்சம், கர்பியாங்லாங்-திமா ஹசாவோ, வேறுபல இடங்களிலும், இக்காலத்திய அரச பயங்கரவாதத்தையும், அனைத்து வகையான அட்டூழியங்களையும்எதிர்கொண்டு,தொழில்நிறுவனக்கொள்ளையையும், இடப்பெயர்ச்சியையும், சுற்றுச்சூழல் சீர்கேட்டையும் எதிர்த்துப் போராடுவதில் முன்னணியில் உள்ள மக்களுக்கு நாம் வணக்கம் செலுத்திட வேண்டும்.

23. நாட்டில் விவசாயிகளின் பெருந்திரள் போராட்டங்களுக்கு எப்படி ஆதரவளிப்பது என்பதை கோடிட்டுக் காட்டும் இணையவழி "போராட்டக் கருவித்தொகுப்பை" "உருவாக்கி" பகிர்ந்து கொள்ள உதவியதற்காக, 21 வயதே ஆன காலநிலை ஆர்வலர் திஷா ரவியை, மோடி அரசாங்கம் வெட்கங்கெட்டமுறையில் பலிகடா ஆக்கியது. தேசத்துரோகம், குற்றச்சதியில் ஈடுபடல், இந்திய அரசுக்கு எதிராக அதிருப்தியை பரப்புதல், பகைமையை ஊக்குவித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளும் இதில் அடங்கும். சர்வதேச அளவில், காலநிலை மாற்ற பிரச்சனையில் உறுதியான நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கங்களை வலியுறுத்தும் வகையில் வெகுமக்கள் போராட்டங்களுக்கு அழைப்பு விடுத்ததன் மூலம், காலநிலை ஆர்வலர்களான கிரேட்டா துன்பெர்க், லிசிப்ரியா கங்குஜம் போன்றோர் உலக அளவில் கவனத்தை ஈர்த்துள்ளனர். காலநிலை மாற்ற நிகழ்ச்சி நிரலை நமது அன்றாட செயல்பாட்டில் இணைத்துக்கொண்டு குறிப்பிட்ட கோரிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் நாம் ஆயத்தமாகிக் கொள்ள வேண்டும். காலநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வை வளர்த்தெடுப்பதற்கான நிகழ்ச்சி நிரலை உள்ளடக்கியதாகவும் மாணவர், இளைஞர் இயக்கத்தின் பங்கு இருக்கவேண்டும். பழங்குடியினர், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள், மலைப்பகுதிகள், கடலோரப்பகுதிகள், எளிதில் சுற்றுச்சூழல் பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ள பகுதிகளில் பணிபுரியும் பிற வெகுமக்கள் அமைப்புகள் அரசாங்கத்தின் வனம் சார்ந்த கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் கண்காணிக்க வேண்டும்.

**-தொடரும்**

# மார்க்சிஸ்ட் ஒருங்கிணைப்புக் குழு (எம்சிசி) சிபிஐ(எம்எல்) விடுதலையுடன் இணைந்தது



ஏ.கே.ராய்
*15-06-1935 -- 21-07-2019*

செப்டம்பர் 9, 2024 அன்று இந்திய நிலக்கரியின் தலைநகரமான ஜார்கண்ட் மாநிலம், தன்பாத்தில் செங்கொடிகள் பறக்க, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒற்றுமைப் பேரணி நடைபெற்றது. 1969ல் சாருமஜூம்தாரால் உருவாக்கப்பட்ட சிபிஐ(எம்எல்) கட்சியுடன் 1972ல் ஏ.கே.ராயால் உருவாக்கப்பட்ட மார்ச்சிஸ்ட் ஒருங்கிணைப்புக் குழு இணைந்தை அறிவிக்கும் நிகழ்ச்சியாக அம் மாபெரும் பேரணி நடைபெற்றது. ஜார்கண்ட் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள், கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளர்கள், முற்போக்காளர்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். எதிர்க்கட்சிகளை வலுவிழக்கச் செய்யும் வேலையில் பாஜக மும்முரமாக இருக்கும் வேளையில் நடைபெற்ற இந்த ஒற்றுமைப் பேரணி, ஜார்கண்ட்டைக் காக்க, ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போராடும் சக்திகளுக்கு ஒரு உத்வேகமூட்டும் செய்தியைச் சொல்லியுள்ளது. இந்த இணைப்பானது சுதந்திர இந்தியாவில் நடைபெற்றுள்ள இரண்டு பாரம்பரியமிக்க இடதுசாரி கட்சிகளுக்கு இடையில் நடந்துள்ள இணைப்பாகும்.

நக்சல்பாரி விவசாயிகள் எழுச்சியிலிருந்து அரசு ஒடுக்குமுறை மற்றும் நிலபிரபுத்துவ வன்முறைக்கு எதிராக உதயமான கம்யூனிச இயக்கம், சிபிஐ(எம்எல்) இந்திய மண்ணில் ஆழமாக வேரூன்றியுள்ளது. ஒடுக்கப்பட்ட, சுரண்டப்பட்ட மக்களுக்காக, உரிமை மறுக்கப்பட்ட இந்திய மக்களுக்காக, ஏழைகளின் உரிமைகளுக்காக, கவுரவத்திற்காகவும் சமூக மாற்றத்தில் ஒரு புரட்சிகர உறுதிப்பாட்டைத் தாங்கி வருவது சிபிஐஎம்எல் கட்சி. நிலக்கரி தேசியமயமாக்கப்படுவதற்காகவும் ஜார்கண்ட்டின் தொழிலாளர் வர்க்கத்திற்காகவும் தொடர்ந்து போராடி வருவது எம்சிசி கட்சி. இந்த இரண்டு நீரோட்டங்களும் ஏ.கே.ராய், ராம் நரேஷ்ராம், மகேந்திரசிங், குருதாஸ் சட்டர்ஜி ஆகிய மகத்தான தலைவர்களை உருவாக்கியது. அவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த இரண்டு நீரோட்டங்களின் ஒன்றிணைவானது தோழர் வினோத் மிஸ்ராவும் தோழர் ஏ.கே. ராயும் போற்றிவந்த பரந்த கம்யூனிஸ்ட் ஒன்றுமையை உணர்த்துகிற வகையில் மிக முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்கிறது. இந்த இணைப்பானது தற்போது இந்தியாவின் குறிப்பாக ஜார்கண்ட்டின் தற்போதைய நிலைமையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந்த இணைப்பை முன்னிட்டு நடைபெற்ற ஒற்றுமைப் பேரணியினைத் தொடர்ந்து தன்பாத்தின் கோல்ப் மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்த மைதானம் முழுவதும் செங்கொடிகளாலும் பதாகைகளாலும் சிவந்து காணப்பட்டது. தில்கா மன்ஜி, சித்து-ஹன்னு, பூலோ- ஜானு, பிர்ஸா முண்டா உள்ளிட்ட தியாகிகள், வரலாற்றுத் தலைவர்கள் படங்களும் வினோத் மிஸ்ரா, ஏ.கே.ராய், குருதாஸ் சட்டர்ஜி, மகேந்திரசிங் உள்ளிட்ட தலைர்களின் படங்களும் அங்கு காணப்பட்டன. நீரையும் வனத்தையும் நிலத்தையும் பாதுகாக்க, ஜார்கண்ட்டின் பழங்குடி மற்றும் அடித்தட்டு மக்களையும் காத்திட பாஜவை வெளியேற்றுவோம் என பேரணியில் கலந்து கொண்ட மக்கள் உறுதியேற்றுக்கொண்டனர். பிஜேபியை வெளியேற்றுவோம்! கொள்ளையைத் தடுத்திடுவோம்! என முழங்கினர். இரு கட்சிகளின் மத்திய குழு உறுப்பினர்கள் அனைவரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். எம்சிசியின் தலைவர் ஆனந்த் மஹதோ தலைமை தாங்கி தொடக்க உரையாற்றினார். சிபிஐஎம்எல் பொதுச் செயலாளர் திபங்கர் சிறப்புரை ஆற்றினார். பல்வேறு தலைவர்களும் எழுச்சி உரை ஆற்றினர். சிபிஐ(எம்எல்) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் ஸவதேஷ், எம்சிசியின் மிதிலேஷ்சிங், சிபிஐஎம்எல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜாராம்சிங், சுதாமா பிரசாத், ஜார்கண்ட் சட்டமன்ற உறுப்பினர் வினோத்சிங், பிகார் மாநில சிபிஐஎம்எல் சட்டமன்ற உறுப்பினர்கள், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக பொதுச்செயலாளர் மீனா திவாரி, திட்டத் தொழிலாளர்கள் தலைவர் சசியாதவ் உள்ளிட்ட பல தலைவர்கள் கலந்து கொண்டனர். பாசிசத்திற்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டத்தை ஆழப்படுத்திட, பாசிச எதிர்ப்பு ஜனநாயக சக்திகளை ஒன்றிணைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

# எங்களுக்கு நீதி வேண்டும்:

## இந்தியாவில் பெண்களின் பாதுகாப்பிற்கான; சுதந்திரத்திற்கான புதுப்பிக்கப்பட்ட போராட்டம்

கொல்கத்தாவின் ஆர்ஜி கர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின், 31 வயது முதுகலை பட்டதாரி பயிற்சி மருத்துவர் கொடூரமாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். இது சர்வதேச இயக்கத்திலிருந்து பெறப்பட்ட 'இரவினை மீட்டெடுப்போம்' என்றழைக்கப்படும் பெண்களின் இயக்கம் சுதந்திர நாளுக்கு முந்தைய இரவில் தொடங்கப்படக் காரணமாகியது. பெண்களின் குறிப்பிடத்தக்க முன்முயற்சியால் தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தால் ஆற்றல் வழங்கப்பட்ட மாபெரும் மக்களின் அறுதியிடலையும் இது மேற்கு வங்கத்தில் தூண்டி விட்டது. இன்றைய இந்தியாவில் பெண்களின் சுதந்திரம், பெண்களின் பாதுகாப்பு, கண்ணியமான, ஜனநாயக வாழ்விற்கான பெண்களிடமிருந்து பறிக்க முடியாத உரிமை ஆகிய தீர்மானகரமான பிரச்சனைகள் மீது இந்த ஆகஸ்ட் 15 இன் கவனம் திரும்பியது. கடினமான 36 மணிநேர வேலையை முடித்த பிறகு அவர் வேலை பார்த்த சொந்த மருத்துவமனையிலேயே ஒரு இளம் பெண் மருத்துவர் மிருகத்தனமான வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். பெண்களுக்கு அவர்களது பணியிடங்களில் முற்றிலும் பாதுகாப்பற்ற சூழ்நிலை இருப்பதன் அதிர்ச்சிகரமான அடையாளமாக இந்த உண்மை உள்ளது. கொல்கத்தாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில இடங்களில் சிறிய எதிர்ப்பு போராட்டமாக திட்டமிடப்பட்ட யோசனை, முன்னெப்போதும் கண்டிராத மாநில அளவிலான பெண்களின் அறுதியிடலாக உடனடியாக வளர்ச்சி பெற்றது. நாடு முழுவதுமுள்ள மாணவர்கள், மருத்துவர்கள், கரிசனமிக்க குடிமக்கள் இந்த மேற்கு வங்க இயக்கத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் சகோதரத்துவ உணர்வுடன் வீதிகளில் உடனடியாக இறங்கினர்.

இது, 2012 ஆம் ஆண்டு பாலியல் வன்புணர்வுக்கு எதிரான மக்கள் எழுச்சியின் தருணங்களை மீண்டும் இந்தியாவில் உயிர்ப்பித்துள்ளது. 2012 ஆம் ஆண்டு, ஒரு தனியார் பேருந்தில் 22 வயது பிசியோதெரபி பயிற்சி மருத்துவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்த நிர்பயா நிகழ்வைத் தொடர்ந்து, அப்போது நாடுமுழுவதும் ஆற்றல்மிக்க போராட்டங்களுக்கு அது வழிவகுத்தது. அதுமட்டுமல்ல, ஒரு நீதிமன்ற கமிட்டியை அமைப்பதற்கும், பெண்கள் இயக்கங்கள், செயல்பாட்டாளர்களுடன் விரிவான கலந்தாலோசனைகள் மேற்கொள்ளவும் அது வழிவகுத்தது. அதன்மூலம் பாலியல் துன்புறுத்தலையும் வன்முறையையும் எதிர்கொள்வதில் குற்றவியல் சட்டங்களைக் கூடுதல் திறன்மிக்கவையாக ஆக்குவதற்கு தேவையான முக்கிய மேம்படுத்தல்களையும் அது தருவித்தது. இக் குற்றத்தில் ஈடுபட்ட ஆறு பேர்களும் கைது செய்யப்பட்டனர். சிறைக் காவலில் இருக்கும் போது ஒருவர் இறந்து விட்டார். 2020 மார்ச் 20 இல் நான்கு பேர் தூக்கிலிடப்பட்டனர். இள வயது குற்றவாளி தனது தண்டனையை சிறையில் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்.

2012-13 இன் பாலியல் வன்கொடுமைக்கு எதிரான இயக்கம், பாலியல் துன்புறுத்தல், வன்முறை நிகழ்வுகளில் நீதி கிடைப்பது குறித்த கேள்வியில் சரியாக கவனம் குவித்தது. மேலும் வழக்குகளை பதிவு செய்வதை எளிதாக்குவது, விசாரணை முறையை விரைவுபடுத்துவது, குற்றவாளிகள் தண்டனை பெறும் விகிதத்தை அதிகரிப்பது ஆகியவற்றிலும் கவனம் குவித்தது. இப்போதும் கூட 'எங்களுக்கு நீதி வேண்டும்' என்ற மைய முழக்கமே மேற்கு வங்கத்தையும் அதைத் தாண்டியும் காற்றைக் கிழித்துக் கொண்டு சென்றது. மிகவும் வெறுக்கத்தக்க இந்த செயலை மூடி மறைக்க செய்யப்படும் ஒவ்வொரு முயற்சியையும் முறியடித்து, நீதி கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யவே மேற்கு வங்க மக்கள் உடனடியாகவும் வலுவாகவும் வீதிகளில் இறங்கினர். மேலும் இந்தக் கோரமான குற்றத்தில் ஈடுபட்ட குற்றமிழைத்தவர் அல்லது உடந்தையாக இருந்தவர் எவரொருவரும் பாதுகாக்கப்படுவதற்கு எதிராகவும் அவர்கள் வீதிகளில் இறங்கினர். பாதிக்கப்பட்டவர் மீதே குற்றம் சுமத்தும் ஆர்ஜி கர் மருத்துவக் கல்லூரி (ஆர்ஜிகேஎம்சி) முதல்வரின் அருவருக்கத்தக்க அறிக்கைக்கு எதிராக 'இரவினை மீட்டெடுப்போம்' என்ற அழைப்பு துல்லியமாக வெளிப்பட்டது. நெருக்கடியின் காரணமாக ஆர்ஜிகேஎம்சி முதல்வர் அந்தப் பதவியிலிருந்து விலகிய உடனேயே, அவருக்கு நகரத்திலுள்ள மற்றொரு மருத்துவக் கல்லூரியின் முதல்வர் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட போது, மக்களின் கோபம்ரக்ஷர காட்டுத் தீயாய் பரவியது.

கொல்கத்தாவின் தெருக்களில் பத்தாயிரக்கணக்கான மக்கள் கூடிய 'இரவினை மீட்டெடுப்போம்' கூட்டங்களும் ஊர்வலங்களும் நிகழ்ந்த அதே இரவில் ஆர்ஜி கர் மருத்துவக் கல்லூரி, மருத்துவமனையை சட்ட விரோத கும்பல் சூறையாடியது. இந்நிகழ்வில் காவல்துறையின் செயலற்ற நிலை, மக்களின் கோபத்திற்கும் அறுதியிடலுக்கும் கூடுதல் பங்களித்தது. முதலமைச்சராக மட்டுமல்ல, மாநில அரசாங்கத்தின் சுகாதார, சட்டம், ஒழுங்கு அமைச்சரவைக்கும் பொறுப்பானவர் என்ற முறையில் அவருடைய சொந்த பொறுப்பை ஒப்புக்கொள்வதற்கு மாறாக, ஒரு கேலிக்குரிய நடவடிக்கை போல, இதுவரை இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஒரே குற்றவாளியைத் தூக்கிலிட வேண்டும் எனக் கோரி முதலமைச்சர்

மம்தா பானர்ஜி 'எதிர்ப்புப் பேரணி' ஒன்றை நடத்தினார்.

பாரம்பரியமாக எதிரெதிர் அணிகளாக இருக்கும் மோகன் பகான், கிழக்கு வங்க அணிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டியை மாநில அரசாங்கம் ரத்து செய்தது. இந்த நடவடிக்கை நகரத்தின் மூன்று உயர் கால்பந்தாட்ட குழுக்களான மோகன் பகான், கிழக்கு வங்கம் முகமதன் ஸ்போட்டிங் கால் பந்தாட்ட ரசிகர்களின் ஒற்றுமை அணிவகுப்பைத் தூண்டிவிட்டு, ஒருமைப்பாட்டுணர்வு, எதிர்ப்புணர்வின் குறிப்பிடத்தக்க மற்றுமொரு வெளிப்பாடாக மாறியது. நிகழ்த்து கலைஞர்கள், வழக்கறிஞர்கள், அனைத்து வகையான தொழில், சமூக வாழ்நிலைமைகளிலிருந்தும் வந்த மக்கள் நீதி கோரி ஒவ்வொரு நாளும் தங்கள் போராட்டங்களை தொடர்கின்றனர்.

இதற்கிடையில் கொல்கத்தா உயர் நீதிமன்ற பரிந்துரையில் இந்த வழக்கின் விசாரணை சிபிஐயிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றமும் இந்த வழக்கைத் தானாகவே எடுத்துக் கொண்டு, மாநில அரசாங்கமும் சிபிஐயும் வழக்கின் நடப்பு நிலவரம் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக் கொண்டுள்ளது. மருத்துவர்களை அவர்களின் போராட்டத்தை முடித்துக் கொண்டு பணிக்கு திரும்ப உச்ச நீதிமன்றம் வேண்டுகோள் விடுத்தது.

அதேவேளையில் மருத்துவ தொழில் செய்பவர்கள், சுகாதாரப் பணியாளர்களின் பணியிடப் பாதுகாப்பை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் குறித்து முடிவெடுக்க தேசிய பணிக்குழு ஒன்றை அமைக்கும் அதன் முடிவையும் அறிவித்தது. அமைதியான வழிகளில் போராட்டத்தை நடத்திட மக்களுக்குள்ள உரிமைகளுக்கு மதிப்பு கொடுக்க வேண்டுமெனவும், தனது சக்தியை பயன்படுத்தி போராட்டங்களை ஒடுக்க முயற்சிக்கக் கூடாது எனவும் மேற்கு வங்க அரசாங்கத்தை அது கேட்டுக் கொண்டது. ஆற்றல் வாய்ந்த போராட்ட இயக்கத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட நெருக்கடி, மாநில அரசாங்கத்தை தெளிவாகவே தற்காப்பு நிலைக்கு தள்ளியது. அதுமட்டுமல்ல உச்ச நீதிமன்றம் செயலூக்கமான வழியில் வினையாற்றவும் அதனை நிர்பந்தப்படுத்தியது. ஓரளவு உண்மையான நீதியையும் சாதகமான மாற்றங்களையும் பெறுவதற்கு இந்த அழுத்தம் நிச்சயமாக தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும்.

இங்கே உள்ள விவாதம் என்பது தெளிவாகவே மருத்துவ தொழில் செய்பவர்களுக்கு பாதுகாப்பு என்பதாக மட்டுமே சுருக்கப்பட முடியாது. பணியிடங்கள், பொது இடங்கள் அதேபோல வீடுகள், குடும்பங்கள் என்ற தனிப்பட்ட தளங்களிலும் அனைத்துப் பெண்களின் உரிமைகளான பாதுகாப்பையும் கண்ணியத்தையும் பாதுகாப்பதாகும். தங்களது உரிமைகளை மீட்டெடுக்க மேற்கு வங்கம் முழுவதற்கும் பெண்கள் வீதிகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அதே இரவில் பிரியங்கா ஹன்ஸ்தா என்ற பழங்குடியின பெண் பர்தமான் மாவட்டத்தின் சக்திகரில் கொடூரமாக கொல்லப்பட்டார். குரூரமான ஆர்ஜி கர் நிகழ்வு நடந்த அதேநேரத்தில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் பெண்கள் மீது பல்வகை வன்முறை நிகழ்த்தப்பட்டது. உத்தர்கண்ட்டில் ஒரு செவிலியர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். பீகாரின் முசாஃபர்பூர் மாவட்டத்தில் ஒரு 14 வயது தலித் பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். மும்பைக்கு அருகில் பட்லாபூரின் புகழ்பெற்ற ஒரு பள்ளியில் மாணவிகள் மீது அதிர்ச்சிகரமான பாலியல் தாக்குதல் உள்ளிட்ட பாலியல் வன்முறையின் கொடூர நிகழ்வுகள் பற்றிய செய்திகள் வந்தன. உச்ச நீதிமன்றம் ஆர்ஜி கர் வழக்கை விசாரிக்கும் ஒரு நாள் முன்னதாக மலையாள சினிமாத்துறையில் ஊடுருவிப் படர்ந்துள்ள பாலியல் துன்புறுத்தல், ஆழமாக வேர் கொண்டுள்ள பெண் வெறுப்பு குறித்து நீதிபதி கே ஹேமா தலைமையிலான கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையை கேரள அரசாங்கம் வெளியிட்டது.

ஜம்முவின் கதுவா, உபியின் ஹாத்ராஸ் முதல் மணிப்பூரின் அதிர்ச்சிகரமான நிகழ்வுகள் வரையிலும், 2012 நிர்பயா நிகழ்விலிருந்து பல எண்ணிக்கைகளில் குரூர பாலியல் வன்புணர்வு, கொலை நிகழ்வுகள் நடந்துள்ளன. இவையெல்லாம் உச்ச நீதிமன்றத்தின் போதுமான கவனத்தை ஒருபோதும் ஈர்க்கவில்லை. பணியிடங்களில் பாலியல் துன்புறுத்தலைத் தடுக்க 1997 இல் உச்ச நீதிமன்றத்தால் நிறுவப்பட்ட விசாகா வழிகாட்டுதல்கள், மேம்படுத்தப்பட்ட 2013 சட்டம் ஆகியவை அதிகளவு மீறப்படுவதை இன்னும் நம்மால் காணமுடிகிறது. பாலியல் வன்புணர்வு குற்றவாளிகள், பாலியல் வன்புணர்வு குற்றம் சுமத்தப்பட்ட அரசியல்வாதிகளை பாஜக பாராட்டுகிறது; ஆற்றுப்படுத்துகிறது. ஆர்ஜி கர் நிகழ்வில் மம்தா பானர்ஜியின் கேலிக்குரிய 'போராட்டம்' மூலமாக சுட்டிக்காட்டப்பட்டது போல, நீதி குறித்த கேள்வியை, பெரும்பாலான கட்சிகள் மரண தண்டனை வேண்டி உரத்த கூச்சலில் அழைப்பு விடுப்பதன் மூலம் மடைமாற்றுவதற்கு முயற்சிக்கிறார்கள்.

உண்மை என்னவென்றால், நிர்பயா வழக்கில் நான்கு தண்டனைக் கைதிகள் தூக்கிலிடப்பட்ட போதிலும், இந்தியாவில் பாலியல் வன்புணர்வு இன்னமும் கூட பரவலாக நடக்கும் குற்றமாக இருக்கிறது. இதன்மூலம் இந்தக் குற்றங்களில் மரண தண்டனை ஒரு தடுப்பு நடவடிக்கையாக இல்லை என்பது தெளிவாகிறது. அனைத்துத் தளங்களிலும் பெண்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை உறுதி செய்வதற்கான நிறுவனமயப்பட்ட நடவடிக்கைகள், உடனடியான, நிச்சயமான நீதி வழங்கல், வலுவான சமூகப் புத்தெழுச்சி, பாலியல் வன்புணர்வு கலாச்சாரத்துக்கும் ஆணாதிக்கத்துக்கும் எதிரான அணிதிரட்டல் ஆகியவையே உடனடியாக காலத்தின் கட்டாயமாகும். ஆர்ஜி கர் கொடூரத்தால் தூண்டிவிடப்பட்ட 'எங்களுக்கு நீதி வேண்டும்' என்ற கர்ஜனை இந்தியாவை உறுதியாக இந்த வழியில் முன்னோக்கி கொண்டு செல்லட்டும்.

***செப்டம்பர் 2024; லிபரேஷன் தலையங்கம்***




# தமிழ் சினிமாவில் புதிய காட்சிகள்

செந்தில்

கதாநாயக பிம்பத்தை அடிப்படையாகக் கொண்ட திரைப்படங்கள் நீண்ட காலமாக தமிழ் திரையுலகில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கின்றன. சினிமா வணிகத்தில் வெற்றி பெறுவதே இதன் அடிப்படை நோக்கமாகும். இத்தகைய மசாலா திரைப்படங்கள் பார்வையாளர்களின் சிந்தனையை மழுங்கடிக்கின்றன. அநீதியான சமூகக் கட்டமைப்பை அப்படியே ஏற்றுக் கொள்ளும் கருத்தியலை பார்வையாளர்களிடம் திணிக்கின்றன. ஒரு நல்ல சினிமா மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டும். தனது பார்வையாளர்களிடம் ஒரு ஊடாடலை நிகழ்த்த வேண்டும். அவர்களின் சிந்தனையை தூண்ட வேண்டும். சமூகத்தில் நிகழும் அநீதியை கேள்விக்கு உட்படுத்த வேண்டும். இதனை மையமாகக் கொண்டு அண்மையில் வெளியான சில படங்களை அணுகலாம்.

***வாழை***

திருநெல்வேலி கருங்குளம் பக்கத்தில் *1998* ஆம் ஆண்டு நடக்கும் கதை. நன்றாக படிக்கும் பள்ளி மாணவன் விடுமுறை நாட்களில் வாழைத்தார்களை சுமந்து சென்று லாரியில் ஏற்றும் கூலி வேலைக்கு செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது. அவனது குடும்பத்தின் வறுமை, கடன்சுமை தான் இதற்கு காரணம். துயரம் மிகுந்த இந்த வாழ்வில் அவனது பள்ளி ஆசிரியை மீது அவன் கொண்டிருக்கும் அன்பு அவனது வாழ்வை நகர்த்திச் செல்கிறது. இதன் போக்கில் கொடுங்கனவான ஒரு நிகழ்வு அவனது வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதாக கதை முடிவுறுகிறது.

முதலாளித்துவ சமூக அமைப்பு ஒரு சிறுவனின் வாழ்வில் நிகழ்த்தும் அவலம் தான் வாழை. அவனது குடும்பம், சுற்றம், ஊர் மக்கள் கடும் வறிய நிலையில் உள்ளனர். இந்த ஏழை எளிய மக்கள் கூலிக்கு வேலை செய்யும் அடிமைகளாக, கடனாளிகளாக, ஓட்டாண்டிகளாக, பஞ்சப் பராரிகளாக இருக்கின்றனர். எங்கும் தப்பிச் செல்ல வழியற்று துன்பச் சேற்றுக்குள் அவர்கள் சிக்கிக் கொண்டுள்ளனர். இறுதியில் மண் சேற்றுக்குள் புதைந்து தங்கள் இன்னுயிரை இழக்கின்றனர். ஆனாலும் கூட இதுவொரு முடிவின்றி அவதியுறும் விசச்சுழலாக, வாழ்நிலையாக தொடரவே செய்கிறது. இந்தச் செய்திகளை இப்படம் அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது. இத்தகைய எளிய மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள கம்யூனிச அரசியலையும் அம்பேத்கரின் தாக்கத்தையும் தொட்டுச் செல்கிறது இப்படம். தொழிலாளர்களின் வாழ்வை, துயரத்தை, மகிழ்வை, காதலை மிக நேர்த்தியான அழகியலோடு காட்சிப் படுத்தியுள்ளார் இயக்குனர் மாரி செல்வராஜ். திருநெல்வேலி வட்டாரப் பேச்சு மொழி இப்படத்துக்கு கூடுதல் அழகூட்டுகிறது.

***கொட்டுக்காளி***

மதுரைக்கு அருகேயுள்ள ஒரு கிராமம். தன் முறைப்பெண்ணை திருமணம் செய்து கொள்வதற்காக வெளிநாட்டிலிருந்து சொந்த ஊருக்கு வருகிறான் பாண்டி. ஆனால், அவனின் முறைப்பெண்ணோ வேறு ஒருவனை நேசிக்கிறாள். எனவே, மாமனை திருமணம் செய்து கொள்ள அவள் மறுக்கிறாள். ஊராரிடம் இதனை மறைத்து அவளுக்கு பேய் பிடித்துவிட்டது என்றும் பக்கத்து ஊரில் இருக்கும் ஒரு சாமியாரிடம் கூட்டிச் சென்றால் சரிசெய்து விடலாம் என்றும் அவளை உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து சாமியாரிடம் அழைத்து செல்கிறார்கள். அவர்களுடன் பாண்டியும் செல்கிறார். அந்தப் பயணமே திரைப்படம். மதுரைத் தமிழ் இப்படத்தின் சிறப்பை அதிகரிக்கிறது. தனியாக பின்னணி இசை அமைக்காமல் காட்சியாக்கப்படும் போது உள்ள இயல்பான இசையையே பயன்படுத்தி இருப்பது இன்னும் சிறப்பு.

நிலப்பிரபுத்துவ விழுமியங்கள், இறுக்கமான சாதியக் கட்டமைப்பு, ஆணாதிக்க, பெண்ணடிமை சிந்தனைப் போக்குகள், அறிவுக்குப் புறம்பான மூட நம்பிக்கைகள், பிற்போக்கு கருத்துகள் நிலவுகிற, கோலோச்சுகிற தமிழ்ச் சமூகத்தை, கிராமப்புரத்தை, குடும்ப அமைப்பை அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டியிருக்கிறது இப்படம். சுதந்திரமாக நடமாட முடியாமல் கல்லில் கட்டப்பட்ட சேவல் மூலம், குடும்ப அமைப்புக்குள் சிறை வைக்கப்பட்டுள்ள பெண்ணை உருவகமாக படத்தின் தொடக்க காட்சியிலேயே காட்டியுள்ளார் இயக்குனர் வினோத் ராஜ். குடும்பப் பெண்கள் மீது ஆண்கள் நிகழ்த்தும் வரைமுறையற்ற வன்முறை பாண்டி வழியாக வெளிப்படுகிறது. முடிவேயற்ற ஒரு முடிவை திரைப்படத்திற்கு வழங்கி பார்வையாளர்கள் தங்களுக்கு ஏற்ற முடிவு பற்றி சிந்திக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பார்வையாளர்களின் பகுத்தறிவை தூண்டி விடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய படத்தில் சூரி, அன்னாபென் போன்ற முன்னணி நடிகர்கள் நடித்துள்ளதும் சிவகார்த்திகேயன் தயாரித்து இருப்பதும் பாராட்டத்தக்கது.

***குரங்குப் பெடல்***

*1980* களின் கதை. ஈரோடு மாவட்டம் கத்தேரி கிராமத்தைச் சேர்ந்த 5-ம் வகுப்பு மாணவன் மாரியப்பன். பள்ளி கோடை விடுமுறையில் சைக்கிள் கற்றுக் கொள்ள விரும்புகிறான். அவனது நண்பர்கள், குடும்பத்தினர், ஊரார் மூலம் அவன்

எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள். அதனை அச்சிறுவன் எவ்வாறு எதிர்கொள்கிறான்? அதில் வெற்றி பெறுகிறானா? எழுத்தாளர் ராசி அழகப்பன் எழுதிய சைக்கிள் என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்ட திரைக்கதை. அழகான, அருமையான, எளிமையான திரைப்படம்.

சிறுவர்களின் மன உலகு இயங்கும் விதம். எண்ண ஓட்டங்கள். அவனது நண்பர்களின், குடும்பத்தினரின், ஆசிரியரின், ஊராரின் செயல்கள் அவனுள் நிகழ்த்துகின்ற தாக்கங்கள். வெளிப்பார்வைக்கு முரடர்கள் போலத் தோன்றும் மனிதர்கள் மென்மையான மனம் படைத்தவர்கள் என்ற உண்மை. உலகின் மீது, சமூகத்தின் மீது, வாழ்வின் மீது மனிதர்கள் கொள்ளும் நம்பிக்கைக்கு காரணங்கள். ஆகியவற்றை காட்சிகளின் மூலம் பார்வையாளனுக்கு நேர்த்தியாக கூறி செல்கிறார் இயக்குனர் கமலக்கண்ணன். பார்வையாளர்களுக்கு நேர்மறையான எண்ணங்களை விதைக்கிறார். இத்தகைய படத்தைத் தயாரித்திருப்பதற்காக நடிகர் சிவகார்த்திகேயன் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

**ஜமா**

திருவண்ணாமலையின் கூத்துக் கலைஞன் கல்யாணம். தனது தந்தையிடம் இருந்து ஏமாற்றிப் பறிக்கப்பட்ட ஜமாவை (கூத்துக்குழு) மீட்க தனது கூத்து வாத்தியாரையே எதிர்த்து நிற்கிறார். அதற்காக தனது காதலையும் கூட புறக்கணிக்கிறார். வீடு, நிலம், தாய் என அனைத்தையும் இழந்து விடுகிறார். அவரது அடவு கட்டும் திறமையின் மீது நம்பிக்கை கொள்கிறார். இறுதியில் அவருக்கு அவரது ஜமா கிடைத்ததா?

தனிப்பட்ட கூத்து கலைஞர்கள் இடையேயான நட்பு, துரோகம், குழு மனப்பான்மை போன்ற உறவு சிக்கல்களின் போக்கில் கூத்து கலைக்கும் கலைஞர்களுக்கும் இடையேயான பிணைப்பு குறித்து இப்படம் பேசுகிறது. கலைஞர்களின் வாழ்வுக்கும் கலைக்கும் உள்ள உயிரோட்டமான தொடர்பு குறித்தும் பேசுகிறது. அதிகம் பேசப்படாத ஒரு கதைக்களத்தை திரைக்கதையின் மையக்கருவாக கொண்டுள்ளதால் இப்படம் பேசத் தகுந்த ஒன்றே. சொல்ல வரும் கதையை நேர்மையாகவும் அழகுணர்ச்சியோடும் யதார்த்தமாகவும் காட்சிப்படுத்திருக்கும் இயக்குனர் பாரி இளவழகன் பாராட்டத்தக்கவர்.

பொழுதுபோக்குத் திரைப்படங்கள் பெருவாரியான பார்வையாளர்களை சென்று சேர்கின்றன. இதற்கு விளம்பரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. திரைப்படத் தயாரிப்பில் கார்ப்பரேட் நிறுவனங்களின் வருகை இதனை புதிய உயரத்திற்கு கொண்டு சேர்த்துள்ளது. அச்சு ஊடகங்கள், தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள், சமூக ஊடகக் காணொளிகள் மூலம் பல்வகை விளம்பரங்களும் மெகா பட்ஜெட் திரைப்படங்களை பார்த்தாக வேண்டிய நெருக்கடியை மக்கள் மீது சுமத்துகின்றன.

இருப்பினும் கடந்த சில ஆண்டுகளாகவே புதிய வகை சினிமா பரவலாக கவனம் பெறுகிறது. வெற்றி மாறன், பா.ரஞ்சித், டி.ஜே.ஞானவேல், மாரி செல்வராஜ் போன்ற இயக்குனர்கள் மாற்றம் நோக்கி நகரும் தமிழ் சினிமாவின் இயக்குனர்களாக உள்ளனர். வினோத் ராஜ், கமலக்கண்ணன், பாரி இளவழகன் போன்ற புதிய தலைமுறை இயக்குனர்கள் பலரும் இவர்களுடன் இணைவது மகிழ்ச்சிக்கு உரியது. இப்போது அடுத்தடுத்து தொடர்ச்சியாக வெளியாகியுள்ள இவர்களின் மேற்கூறிய திரைப்படங்களும் இதனை வெளிப்படுத்துகின்றன. இப்படங்கள் பார்வையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பையும் பெற்றுள்ளன. இந்தப் புதிய சினிமாக்கள் சமூக ஊடகங்கள் வழியாக பரவலாக அறியப்படும் பேசுபொருளாக மாறியுள்ளன. இது வரவேற்கத்தக்க நிகழ்வுப் போக்காகும். நல்ல படங்களை வரவேற்கவும் கொண்டாடவும் தமிழ் சினிமா ரசிகர்கள் எப்போதும் தயாராக உள்ளதையும் இந்த புதிய சூழல் எடுத்துக்காட்டுகிறது. இந்த ஆரோக்கியமான புதிய போக்கு தமிழ் சினிமாவில் நிலைபெறும் நல்வாய்ப்பு உள்ளதாகவே தெரிகிறது.

**தலையங்கம் தொடர்ச்சி...**

பள்ளிக் கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, “பிஎம்ஸ்ரீ திட்டப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டாலும் புதிய கல்விக் கொள்கையை எந்நாளும் எதிர்ப்போம்” என்றார். அதாவது மோடி அரசின் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்போம், ஆனால், அத்திட்டங்களை அமல்படுத்துவோம் என்கிறார்! இந்தப் பின்னணியில்தான் அரசு பள்ளிகளில் நடந்த ஆன்மீகச் சொற்பொழிவும் பார்க்கப்பட வேண்டும். அந்த சர்ச்சைக்குரிய சொற்பொழிவாளர், அன்பில் மகேஷை சந்தித்த படங்களும் உள்ளன. ஆனால், பிரச்சனை பெரிதானதால், கல்வி அமைச்சர், ‘எனது இடத்திற்குள் வந்து என்னுடைய ஆசிரியரை அவமதித்தவரை சும்மா விடமாட்டேன்’ என்று பேசி ஆசிரியர் சங்கருக்கு சால்வை போட்டு சாமாளித்துள்ளார். ஆர்எஸ்எஸ்-பாஜக தங்கள் கொள்கைகளை பிஞ்சு உள்ளங்களில் பதியச் செய்ய பல்வேறு திட்டங்களுடன் வருகின்றன. அப்படியிருக்கும்போது அவற்றுக்கெதிராக வலுவான எதிர்ப்பைக் கட்டமைப்பதற்கு மாறாக திமுக அரசு ஒப்புக்காகப் பேசிக்கொண்டிருக்கிறது. கல்வி காவிமயமாக்கம்தான் மோடியின் தேசிய கல்விக் கொள்கை. ஆனால் அதை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொண்டே அதன் இணைப்புத் திட்டங்களை அமல்படுத்தி வந்தால்...? பள்ளிக் கூடங்கள் மாணவர்களுக்கு அறிவியலைக் கற்றுத்தர வேண்டும். பாடங்களை தாய் மொழியில் கற்றுக் கொடுக்க வேண்டும். மதச் சார்பற்ற அரசு என்றால், எப்படி அரசியலோடு மதத்தை கலக்கக் கூடாதோ அதுபோல், கல்வியோடும் மதத்தை கலக்கக் கூடாது. பள்ளிக்கூடங்கள் மாணவர்களுக்கானது. அவர்களை அறிவில் சிறந்தவர்களாக, சுயமாகச் சிந்திப்பவர்களாக, பகுத்தறிவாளர்களாக ஆக்கும் இடம். கல்வி கடைச் சரக்காக, தனியார் கையில் போனதால்தான் இதுபோன்ற பிரச்சனைகள் தலை தூக்குகின்றன. கல்வியை தனியார்மயமாக்குவது, காவிமயமாக்குவது மட்டுமின்றி சிலருக்கு மட்டுமே கல்வி என்பதற்கானதே மோடியின் தேசிய கல்விக் கொள்கை. எனவே அது தமிழகத்தில் எந்த வடிவத்திலும் உள்நுழைவதை அனுமதிக்கக் கூடாது.

# ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் – யுடியுசியின் 10ஆவது அகில இந்திய மாநாட்டில் ஏஐசிசிடியுவின் வாழ்த்துரை.

ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் -யுடியுசி தனது 10ஆவது அகில இந்திய மாநாட்டை சேலம் மாநகரில் செப்டம்பர் 1, 2 தேதிகளில் நடத்தியது. தோழர் ஹித்திஷ் கோஸ்வாமி நினைவரங்கத்தில் (சேலம் மாநகராட்சி பல்நோக்கு அரங்கம்) நடைபெற்ற மாநாட்டு துவக்க அமர்வில் ஏஐசிசிடியு சார்பில் அகில இந்திய துணைத் தலைவர் தோழர் சங்கரபாண்டியன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் ஆர்எஸ்பி கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் மனோஜ் பட்டாச்சார்யா தொடக்க உரையாற்றினார். தொமுச, ஐஎன்டியுசி, சிஐடியு, ஹச்எம்எஸ், ஏஐயூடியூசி ஆகிய மைய சங்கத் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றினார்கள். யுடியுசி பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர், தோழர். பிரேமச்சந்திரன் மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டு மலரை ஆர் எஸ் பி யின் முன்னாள் தலைவர் தோழர்.பாபு திவாகரன் வெளியிட்டார். முன்னதாக ஏ ஐ சி சி டி யு சார்பில் மாநாட்டு மலருக்கான வாழ்த்துச் செய்தி அனுப்பப்பட்டிருந்தது. மாநாட்டில் ஏ ஐ சி சி டி யு தோழர்கள் பால்ராஜ், முருகன், கோவிந்தராஜ், வேல்முருகன், நடராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். தோழர் சங்கர பாண்டியன், சேலம் சிறை தியாகிகளை நினைவு கூர்ந்து துவங்கிய தனது வாழ்த்துரையில்,

தேசிய ஜனநாயக கூட்டணியின் மோடி 3.0 ஆட்சி பலம் இழந்திருந்தாலும் தொழிலாளர் விரோத, கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளை அமலாக்குவதில் அதே மும்முரம் காட்டி வருகிறது. நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டம், கடும் விலைவாசி உயர்வு பற்றி மோடியின் சுதந்திர தின உரையில் எதுவும் இல்லை. மாறாக, மதவாத "பொது சிவில் சட்டம்", கூட்டாட்சிக்கு எதிரான "ஒரு தேசம்; ஒரு தேர்தல்" ஆகியவையே இடம்பெற்றிருந்தன. நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் முன்வைத்த பட்ஜெட்டிலும் மத்திய தொழிற்சங்கங்கள் முன்வைத்த உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதற்கான ஆலோசனைகள் எதுவும் இடம்பெறவில்லை. அதுபோல், விவசாயிகளின் விளைபொருளுக்கான குறைந்தபட்ச ஆதார விலை கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக, கார்ப்பரேட்டுகளுக்கு வரிச்சலுகை, கடன் தள்ளுபடி, தேசத்தின் சொத்துக்களை கையளிப்பது ஆகியவையே இடம்பெற்றிருந்தன.

மத்திய அரசு அறிமுகப்படுத்தி உள்ள மின்சார திருத்த சட்டம் மின் வாரியத்தை தனியார் மயமாக்குவதையும் இலவச மின்சாரத்தை, மின்சார மானியத்தை ஒழித்துக் கட்டுவதையும் நோக்கமாகக் கொண்டது. மின்வாரிய ஊழியர்கள், விவசாயிகள், சிறு, நடுத்தர தொழில் முனைவோர், பொதுமக்கள் இணைந்து அதை முறியடிக்க வேண்டும்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு மோடி அறிவித்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் *UPS* ஒரு ஏமாற்றுத் திட்டமே. பழைய ஓய்வூதியத் திட்டம் *OPS* ஐ மீண்டும் கொண்டுவரும் வரை மத்திய, மாநில அரசு ஊழியர்களின் போராட்டம் ஓயாது.

நான்கு தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் மற்றும் தேசிய பணமாக்கல் திட்டத்திற்கு எதிரான, தொழிற்சங்க உரிமைக்கான போராட்டங்களை ஒடுக்கும் விதத்தில் புதிய குற்றவியல் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதையும் நாம் பார்க்கத் தவறக் கூடாது. இந்திய தொழிற்சங்க இயக்கம் புதிய குற்றவியல் சட்டங்களுக்கு எதிரான போராட்டங்களையும் தீவிரப்படுத்த கடமைப்பட்டுள்ளது.

நாடு தழுவிய அளவில் அனைத்து உழைக்கும் மக்களுக்கும் கௌரவமான ஊதியம், கண்ணியமான பணி நிலைமைகள், தொழிற்சங்க உரிமைகள் ஆகியவற்றோடு ஏகாதிபத்திய போர் மற்றும் வெறுப்பு அரசியலுக்கு எதிராக மதசார்பின்மைக்காகவும், அமைதிக்காகவும் ஏஐசிசிடியு, யுடியுசி உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கங்களோடு இணைந்தும் போராட்டங்களை முன்னெடுக்கும் என்றார். யுடியுசியின் மாநில பொதுச் செயலாளர் தோழர். சேக்கிழார் நன்றி கூறினார்.



# ஏஐசிசிடியுவின்
# 11ஆவது அகில இந்திய மாநாட்டை
# பெருவெற்றி பெறச் செய்வோம்!

## தொழிலாளர் வர்க்கத்தின் மீதான பாசிச தாக்குதலை முறியடிப்போம்! சளைக்காத முயற்சிகள் மூலம் தடைகளை கடந்து ஏஐசிசிடியுவை புதிய சிகரங்களுக்கு எடுத்துச் செல்வோம்!

மகாராஷ்டிரா மாநிலம், புனேயில் ஏஐசிசிடியு வின் தேசியக்குழு கூட்டம் ஆகஸ்டு 28, 29-2024 தேதிகளில் நடைபெற்றது.

தோழர்கள் சங்கர், சசியாதவ், அதுல் திகே, சங்கர பாண்டியன், சுசேதா, நிர்மலா, நபேந்துதாஸ் குப்தா ஆகியோர் அடங்கிய தலைமைக் குழு கூட்டத்தை நடத்தியது.

இன்றைய தேசிய சூழல் பற்றி தேசியக்குழு விரிவாக விவாதித்தது. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மோடி ஆட்சிக்கு எதிராக தெள்ளத் தெளிவான தீர்ப்பை மக்கள் வழங்கியிருக்கிறார்கள். பாஜகவால் அறுதிப் பெரும்பான்மைக்கு 32 இடங்கள் குறைவாக 240 தொகுதிகளிலேயே வெற்றி பெற முடிந்திருக்கிறது. இது 2019-ல் பாஜக பெற்ற தொகுதிகளை விட 63 இடங்கள் குறைவானதாகும். சிபிஐ (எம் எல்) கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வெற்றி உட்பட ஒரு வலுவான எதிரணி எழுந்து வந்திருக்கிறது. ஆனபோதிலும், சிறுபான்மை மோடி ஆட்சி தொழிலாளர் விரோத 4 சட்டத்தொகுப்புகளை அமலாக்குவதிலும், தனியார்மயத்தை தீவிரமாக முன்னெடுப்பதிலும், மக்கள் உரிமை மீது தாக்குதலை தொடுக்கும் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் குறியாக இருக்கிறது. மோடி 3.0 ஆட்சியின் பட்ஜெட், உழைக்கும் மக்களுக்கு, வேலையில்லா இளைஞர்களுக்கு பெரும் துரோகமிழைத்து விட்டது. "பொது சிவில் சட்டம்", "ஒரு நாடு ஒரு தேர்தல்" ஆகிய பிரதமர் மோடியின் சுதந்திர தின பேச்சு தொடர்ந்து ஜனநாயகத்தையும் அரசியலமைப்புச் சட்டத்தையும் சீர்குலைக்கும் விதத்திலேயே அமைந்துள்ளது.

இதுபோன்ற சூழலில் தொழிலாளி வர்க்கம் எழுந்து நின்று, வீதிகளில் அணி திரண்டு மோடி ஆட்சிக்கு தக்க பாடத்தை புகட்ட வேண்டிய அவசியம் உள்ளது. வரவிருக்கின்ற மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், ஜம்மு- காஷ்மீர் மற்றும் ஹரியானா சட்டமன்றத் தேர்தல்களில் பாஜகவை, தேசிய ஜனநாயக கூட்டணியை தோற்கடிக்க ஏஐசிசிடியு முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது.

தேசிய கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள்:

மத்திய தொழிற்சங்கங்கள் தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக அறிவித்துள்ள செப்டம்பர் 23, கருப்பு தினத்தை பெரும் எண்ணிக்கையில் தொழிலாளர்களை திரட்டி வெற்றி பெறச் செய்வோம்.

ஏஐசிசிடியுவின் 11ஆவது அகில இந்திய மாநாட்டை 2025 பிப்ரவரி 23, 24, 25 தேதிகளில் டெல்லியில் வெற்றிகரமாக நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. பிப்ரவரி 23 பொது மாநாட்டு நிகழ்ச்சியானது பல்வேறு தொழிற்சங்கத் தலைவர்கள், வெளிநாட்டு விருந்தினர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வாக டெல்லி டலகோத்ரா ஸ்டேடியத்தில் நடைபெறும். பொது மாநாட்டுக்கான அணி திரட்டல் வட மாநிலங்களில் இருந்து செய்யப்படும்.

அகில இந்திய மாநாட்டுக்கு முன்னதாக தமிழ்நாடு ஒரு லட்சம் உறுப்பினர் சேர்க்க வேண்டும். இந்தியா முழுவதும் 6,75,000 உறுப்பினர்கள் சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க உறுப்பினர் இணைப்புக் கட்டணம், மாநாட்டு நிதி என்ற வகையில் ரூபாய் 40 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு பங்களிப்பாக 4 லட்சம் கொடுக்க வேண்டும்.

மாநில வாரியாக, துறைவாரியாக கூட்டங்கள் நடத்தி மாநாட்டு தயாரிப்பு பணிகளை துவக்க வேண்டும். இந்நிகழ்ச்சிகளில் அகில இந்திய தலைவர் / பொதுச் செயலாளர் கலந்து கொள்வர்.

இலக்கை அடைவதை, குறிப்பாக இளைஞர்கள் பெண்கள் மத்தியில் இருந்து ஊழியர்களை வளர்ப்பதை, அமைப்பைப் பலப்படுத்துவதையும் கொண்டே மாநாட்டு வெற்றிக்கான அளவீடு இருக்கும்.

உறுப்பினர் இலக்கை அடைவது என்பது நம் அமைப்பு கட்டமைப்பை பலப்படுத்துவதோடு, ஊழியர் கட்டமைப்பை வளர்ப்பதோடு, புதிய உத்வேகத்தை உட் செலுத்துவதோடு பின்னிப்பிணைந்ததாகும்.

நம் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிக்க அரசின் பல்வேறு திட்டங்களில் வேலை செய்யும்

தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், பல்வேறு அமைப்பாக்கப்பட்ட துறையில் வேலை செய்யும் அமைப்பு சாரா தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுவான அமைப்பு சாரா தொழிலாளர்கள் மத்தியில் நாம் சென்றாக வேண்டும். ரயில்வே, நிலக்கரி சுரந்த தொழிலாளர்கள் மத்தியிலும் நமக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

அகில இந்திய கட்டுமானத் தொழிலாளர் கூட்டமைப்பு (AICWF), அகில இந்திய திட்டத் தொழிலாளர்கள் கூட்டமைப்பு (AISWF),அகில இந்திய நகராட்சி மற்றும் தூய்மைத் தொழிலாளர் கூட்டமைப்பு (AIMSWF), இந்திய ரயில்வே ஊழியர் கூட்டமைப்பு (IREF) ஆகியவற்றின் தேசிய மாநாடுகளை நாம் ஏற்கனவே நடத்தி முடித்துள்ளோம். மாநாடுகளில் நிர்ணயிக்கப்பட்ட உறுப்பினர் இலக்குகளை அடைய வேண்டியுள்ளது.

தேசிய கவுன்சில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள்:

கொல்கத்தா ஆர் ஜி கர் மருத்துவமனையில் இளம் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதற்கு தேசிய கவுன்சில் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியது. குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையை உறுதி செய்வதுடன் மருத்துவர்கள் மற்றும் மருத்துவத்துறை ஊழியர்களின் பணியிட பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றியது.

மத்திய அரசு ஊழியர்களுக்கு மோடி அரசு கொண்டு வந்துள்ள ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் UPS ஐ நிராகரித்த தேசிய செயற்குழு பழைய ஓய்வூதிய திட்டத்தையே (OPS) அமல்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறது.

பீகாரில் 2024 ஜூலை 8 முதல் முகத்தை அடையாளப்படுத்தி வைக்கும் வருகைப் பதிவு முறையை எதிர்த்தும் இன்னும் பல்வேறு கோரிக்கைகளுக்காகவும் போராடி வருகிற சுகாதாரத் துறை பணியாளர்கள் போராட்டத்திற்கு தேசிய கவுன்சில் முழு ஆதரவு தெரிவிக்கிறது. உடனடியாக பீகார் அரசு தலையிட்டு பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சனையை சுமூகமாக தீர்க்க வேண்டுமென தேசியக்குழு கேட்டுக் கொள்கிறது.

அனைத்து வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியதாரர்களுக்கும் பஞ்சபடி உயர்வுடன் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ 10,000 நிர்ணயம் செய்ய வேண்டுமென கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாட்டின் டிவிஎஸ் குழுமத்தின் சோளிங்கர், பிரேக்ஸ் இந்தியா ஆலையில் பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை உடனடியாக பணிக்கமர்த்த வேண்டுமெனவும் மாநிலத்தின் பல்வேறு டிவிஎஸ் நிறுவனங்களில் நடைபெறும் சட்டவிரோத தொழிலாளர் நடைமுறையை தமிழக அரசாங்கம் தலையிட்டு நிறுத்த வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றியது.

வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா தொழிலாளர்களின் சட்டமன்ற முற்றுகை போராட்ட அறிவிப்பை தொடர்ந்து ஏஐசிசிடியு அகில இந்திய துணைத் தலைவர் தோழர் இரணியப்பன் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக கைது செய்யப்பட்டதற்கு தேசிய கவுன்சில் கண்டனம் தெரிவித்தது. உயிரியல் பூங்கா நிர்வாகம் நான்கு தொழிலாளர்களை பணி நீக்கம் செய்ததையும் சங்கத்தின் கொடி, பெயர் பலகையை அகற்றி அராஜகமாக நடந்து கொண்டதையும் தேசிய கவுன்சில் வன்மையாக கண்டித்தது.

ஆயுத தளவாட தொழிற்சாலைகளை மீண்டும் அரசாங்க நிறுவனமாக கொண்டு வர வேண்டும் என்றும் அத்தியாவசிய பாதுகாப்பு சேவை சட்டத்தை ரத்து செய்து தொழிற்சங்க உரிமைகளை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்றும் தேசியக் கவுன்சில் வலியுறுத்துகிறது.

பெங்களூருவின் ஆர் எம் சி ரெடிமிக்ஸ் கான்கிரீட் நிறுவனம் சட்ட விரோத கதவடைப்பு மூலம் தொழிலாளர்களின் வேலையை பறித்துள்ளதற்கு கண்டனம் தெரிவித்த தேசிய கவுன்சில், உடனடியாக கர்நாடக மாநில அரசு தலையிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறது.

நாட்டில் நிலவும் ஊதிய பாரபட்சத்தை பொறுத்துக் கொள்ள முடியாது எனவும் உடனடியாக அனைத்து உழைக்கும் மக்களுக்கும் குறைந்தபட்ச மாதாந்திர ஊதியமாக ரூபாய் 35,000 அறிவிக்க வேண்டுமெனவும் தேசியக் கவுன்சில் கேட்டுக்கொள்கிறது.

குறைந்தபட்ச வைப்புத் தொகை இல்லை எனக் கூறி கடந்த 3 ஆண்டுகளில் சாமானிய மக்களின் சேமிப்புக் கணக்கிலிருந்து ரூபாய் 10,000 கோடியை வங்கிகள் எடுத்துக் கொண்டதற்கு தேசியக் கவுன்சில் கடும் கண்டனம் தெரிவிக்கிறது. இதற்கு முரணான விதத்தில் பல லட்சம் கோடி கார்ப்பரேட் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டதை சுட்டிக்காட்டிய தேசியக் கவுன்சில் உடனடியாக மக்களின் சேமிப்பு கணக்கில் எடுக்கப்பட்ட பணம் மீண்டும் அவர்கள் கணக்கில் வரவு வைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறது. கார்ப்பரேட்டுகளின் கடன் தள்ளுபடிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் தீர்மானம் செய்கிறது.

உடனடியாக தொழிலாளர் விரோத 4 சட்டத்தொகுப்புகள் திரும்பப் பெற வேண்டுமென்றும் பொதுத்துறை மற்றும் அரசாங்க துறைகளை தனியார் மயமாக்கும் கொள்கைகள் உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும் தேசியக் கவுன்சில் தீர்மானம் நிறைவேற்றுகிறது.

# விசைத்தறித் தொழில் நெருக்கடி;
# தொழிலாளரை அழிக்கிறது!

ஆர். வேல்முருகன்

இந்தியா முழுவதும் 20 லட்சம் விசைத்தறிகள் உள்ளன. தமிழ்நாட்டில் ஆறு லட்சம் விசைத்தறிகள் உள்ளன. கோவை, திருப்பூர் மாவட்டங்களில் 2,50,000 விசைத்தறிகள் உள்ளன. இம் மாவட்டங்களில் சுமார் 4 இலட்சம் தொழிலாளர் நேரடியாகவும் சுமார் 3 இலட்சம் தொழிலாளர் மறைமுகமாகவும் வேலை செய்கிறார்கள். ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் சுமார் 3 இலட்சத்திற்கும் அதிகமான விசைத்தறிகள் இயங்குகின்றன. இவற்றில் சுமார் 5 இலட்சம் பேர் நேரடியாகவும், 3 இலட்சம் பேர் மறைமுகமாகவும் வேலை செய்கிறார்கள். வேட்டிகள், சேலைகள், துண்டுகள், காடா துணிகள் மற்றும் ஏற்றுமதிக்கான சட்டைகள், ஆடைகள் தயாரிக்கத் தேவையான துணி ரகங்கள் எனப் பல்வேறு ரகங்கள் விசைத்தறிகளில் தயாரிக்கப்படுகின்றன.

பெரும் ஜவுளி உற்பத்தியாளர்கள் தங்களுடைய விசைத்தறிகளையும், பாவுநூலையும் அடைப்பு தறி முதலாளிகள் எனப்படுபவர்களிடம் கொடுத்து துணியை உற்பத்தி செய்து பெறுகின்றனர். அல்லது சொந்தமாக தறிகளை வைத்திருக்கும் சிறிய பட்டறை முதலாளிகளிடம் நூல் கொடுத்தும் நெசவுசெய்து துணியை வாங்குகின்றனர். இத்தகைய சிறிய பட்டறை முதலாளிகள் தான் நேரடியாக விசைத்தறி தொழிலாளரை பணிக்கமர்த்தி உற்பத்தியில் ஈடுபடுத்தி தொழிலாளருக்கு கூலி வழங்குகின்றனர். பொதுவாக 5 முதல் 15 தறிகள் வரை வைத்துள்ள சிறிய முதலாளிகளே, தமிழ்நாட்டின் விசைத்தறி துணி உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

இதுவல்லாமல், நேரடியாக ஜவுளி உற்பத்தியாளர்கள் 50, 100 தறிகள் வரை மெசின்களை வைத்து நடத்தும் பெரிய விசைத்தறிக்கூடங்களும் உள்ளன. அரசு ஆதரவுடன் தானியங்கி தறிக் கூடங்கள் தற்போது பெருகி வருகின்றன. வெளிநாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான பழைய நவீனத் தறிகளை வாங்கி உருவாக்கப்படும் இத்தகைய ஆட்டோலூம் பட்டறைகள் பாரம்பரியமாக செயல்பட்டு வரும் இலட்சக்கணக்கான சாதா தறிகளை வைத்து இயக்கும் பட்டறைகளுக்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்தி வருகின்றன.

விசைத்தறி தொழிற்துறைக்குள் நிகழும் கட்டமைப்பு மாற்றங்கள்

ஒன்றிய, மாநில அரசுகளின் கார்ப்பரேட் பெருமுதலாளித்துவ ஆதரவு தொழில் கொள்கைகள் காரணமாக விசைத்தறி நெசவு தொழில் கடுமையான நெருக்கடியில் சிக்கி உள்ளது; கொரோனா நோய் காலத்திற்குப் பிறகு, விசைத்தறி பட்டறைகள் தொடர்ச்சியாக மூடப்பட்டு வருகின்றன. வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து விசைத்தறி தொழிலாளர் வாழ்வு படு மோசமாக மாறியுள்ளது.

ஆட்டோலூம் வருகையால், வேட்டி சேலை துண்டு போன்ற சாதாரண விசைத்தறி ரகங்கள் ஆட்டோலூம் நவீன தறியில் ஓட்டப்படுகிறது. சாதாரண தறிகள் இந்த ரகங்கள் கிடைக்காமல் நலிவடைந்து போகின்றன ; பட்டறைகள் மூடப்படுகின்றன. சாதா தறிகள் பழைய இரும்பு கடைகளுக்கு கொண்டு செல்லப்பட்டு எடைக்கு போடப்படுவதும் தொடர் கதையாகி வருகிறது.

சொந்தமாகவும், வாடகைக்கு தறிகள் வாங்கியும் சாதாரண தறிகள் போட்டு கூலிக்கு நெய்யும் விசைத்தறி தொழிலாளர்கள், ரகத்தை மாற்ற நெசவு செய்திட தறிகளை மேம்படுத்த வேண்டியது அவசர அவசியம் ஆகிவிட்டது. டிராபாக்ஸ், செட்டாப் பாக்ஸ், ஜாக்காடு போன்றவை அமைத்தால் மட்டுமே இலட்சக்கணக்கானவர்கள் தொழிலில் நீடிக்க முடியும்; அல்லது வெளியேற வேண்டும். கூலிக்கு நெய்யும் இவர்கள் வைத்திருக்கும் சாதா தறிகளை மேம்படுத்த முதலீட்டு உதவிகள் தேவைப்படுகிறது ; இவர்களுக்கு, வட்டியில்லா அரசு கடன் உதவிகள் அவசர அவசியமாகும்.

ஜிஎஸ்டி வரி விதிப்பு பாதிப்பு

ஜவுளி துணிகளுக்கான நூல் மீது 12% ஜிஎஸ்டி வரி விதிக்கப்படுகிறது; இதுவல்லாமல் விசைத்தறிகளில் தயாராகும் துணிகளுக்கு ஜிஎஸ்டி சேவை வரி 5% விதிக்கப்படுகிறது. ஜிஎஸ்டி வரிகள் உற்பத்தியாகும் துணி - ஆடைகளின் மதிப்பை கூட்டுகிறது. இதனால், விலை உயர்ந்து, ஒருபுறம் உற்பத்தியை பாதிக்கிறது. மற்றொரு புறம், விலை உயர்த்தினால் விற்பனைக்கு ஏற்படும் சந்தை நெருக்கடிகளை சமாளிக்க தொழிலாளரது கூலிகள் குறைக்கப்படுகின்றன.

நூல் விலை உயர்வு ஏற்படுத்தும் பாதிப்புகள்

எனவே தான், விசைத்தறி தொழில் பாதுகாக்கப்பட வேண்டும் ; விசைத்தறி தொழில் சார்ந்த தொழிலாளர் வேலை வாய்ப்புகள் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

தொழிலாளர்களின் துயர நிலை அதிகரிக்கிறது :-

'விசைத்தறிக் கூடங்கள் தொழிற்சாலை சட்ட வரம்புக்குள் வராது' என அறிவித்து முதலாளிகள் எவ்வித தொழிற்சாலை - தொழிலாளர் சட்டங்களையும் நடைமுறைப் படுத்துவதில்லை. ஆண் - பெண் விசைத்தறித் தொழிலாளர் மிக மோசமான பணி நிலைமைகளில் வேலை செய்கின்றனர். குடிநீர், கழிப்பிட வசதிகள் கூட முறையாக செய்து தரப்படுவதில்லை. 'பாக்கி' முறை என்னும் கொத்தடிமை முறை நிலவி வருகிறது. பட்டறை முதலாளிகள் ஒரு தொகையை முன்பணமாக கொடுத்து தொழிலாளர்களை பணிக்கமர்த்துவர். அந்த அசல் தொகையை திருப்பி செலுத்தும்வரை சம்பந்தப்பட்ட தொழிலாளி அந்த முதலாளியிடம்தான் வேலை செய்தாக வேண்டும்; உழைப்பை யாரிடம் வேண்டுமானாலும் விற்கும் சுதந்திரம் தொழிலாளரிடமிருந்து பறிக்கப்படுகிறது. இத்தகைய கொத்தடிமை வேலை நிலைமைகளுக்கு மத்தியில் பணியாற்றும் தொழிலாளர் மிகக்கடும் வாழ்வாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டுள்ளனர். இதனால், ஆண் - பெண் விசைத்தறித் தொழிலாளர் சிறுநீரகங்கள் விற்பதும் பெண்கள் கருமுட்டைகளை விற்பதும் தொடர்ச்சியாக நடைபெறுகிறது.

இத்தகைய பின்னணியில், மூன்றாண்டு கொரோனா காலகட்ட வேலை இழப்பினால், விசைத்தறி தொழிலாளருக்கு, வேலை - கூலி இழப்பினால் சில இலட்சம் ரூபாய் கடன்கள் உருவாகியுள்ளன.

மற்றொருபுறம், நூற்றுக்கணக்கான ரகங்கள், நூற்றுக்கணக்கான கூலி அடிப்படையில் தொழிலாளர்களுக்கு கூலி வழங்கப்படுகிறது.12 மணிநேரத்திற்கு ஒரு தொழிலாளி 8 தறி, 12 தறி ஓட்டினால் கூட வாரம் ரூ3000 முதல் ரூ.4000- வரை மட்டுமே கூலியாக கிடைக்கிறது; தொடர்ச்சியான வேலையும் கிடைப்பதில்லை.

இரண்டு தறிகளை வீட்டில் போட்டு முதலாளிகளிடம் பாவு - கோனு வாங்கி கூலிக்கு ஓட்டும் தொழிலாளர் வருமானத்தை பொறுத்தவரையில் கணவன் மனைவி கூட்டு உழைப்பினால் வாரம் ரூ 5000 மட்டுமே கூலியாக பெற முடிகிறது.

பல ஆண்டுகளாக கூலிகள் உயர்வே இல்லை. நூல் ரகங்கள் கொடுக்கும் முதலாளிகள், அவற்றை வாங்கி தறிகளில் ஓட்டி உற்பத்தி செய்யும் முதலாளிகள், தொழிலாளருக்கு ஆண்டுக்கு ஒருமுறை கூட கூலி உயர்வு தருவதில்லை. ஒவ்வொரு ஆண்டும் தொழிலாளருக்கு தரப்படும் போனஸ் 10% மட்டுமே!

சில இடங்களில் சதவீதம் போனஸ் என்பது நடைமுறையில் இல்லை. மாதம் ஒன்றுக்கு ரூ.500 அல்லது 600 என கணக்கிட்டு ஆண்டு போனசாக ரூ. 6000- வரை தரப்படுகிறது; இத் தொகை10 நாட்கள் கூலி கூட இல்லை. இப்பகுதிகளில் போனசின் பழைய பெயர் இனாம் ஆகும்.

மிகக் குறைந்த வருமானத்தில் வீட்டு வாடகை, மளிகைப்பொருட்கள், குழந்தைகளின் மருத்துவ, கல்விசெலவுகள் என அரைவயிறாக குடும்பத்தோடு பட்டினி கிடக்கவும் வேண்டியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளாக, அத்தியாவசிய பொருட்களின் கடும் விலைஉயர்வால் சத்துள்ள உணவு சாப்பிடமுடியாத நிலை, இதனால் நோய்த் தாக்குதல், மருத்துவச் செலவு என துயரத்தை அதிகரிக்கின்றன.

சுய உதவிக் குழுக்கள் மூலமாக வாங்கிய கடன்களைக் கட்ட முடியாமல் மேலும், கந்துவட்டிக்கு கடன் பெற்று வட்டி கூடக் கட்ட முடியாமல் தொழிலாளர்கள் தற்கொலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்கொலைகளில் இருந்து பாதுகாக்க விசைத்தறி தொழிலாளர் குடும்பங்களில் உள்ள அனைத்து மைக்ரோ பைனான்ஸ்/ சுய உதவி குழு கடன், வட்டி முழுவதுமாக தள்ளுபடி செய்ய வேண்டும்.

பெரும்பாலான தொழிலாளர் சொந்த வீடு இல்லாதவர்கள். இவர்கள் வாடகை வீட்டில் ரூ. 3000 முதல் 5000 வரை வாடகை செலுத்த வேண்டியுள்ளது. இதுவே பெரும் சுமையாக உள்ளது. வீடற்ற தொழிலாளருக்கு விலை இல்லா வீடு- வீட்டுமனைகளை வழங்க வேண்டும். நல வாரியத்தில் இருந்து விசைத்தறி தொழிலாளருக்கு வழங்க வேண்டிய இலட்சக்கணக்கான உதவித்தொகை விண்ணப்பங்கள் நிலுவையில் உள்ளன.

எனவே ஒன்றிய, மாநில அரசுகள் உடனே தலையிட்டு, விசைத்தறி தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம், வேலை உத்தரவாதம், வாழ்வாதாரம் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.


மாலெ தீப்பொறி சந்தாதாரர் ஆகிடுவீர்!

மாதம் இருமுறை

தனி இதழ் ரூ.10
ஆண்டுச் சந்தா ரூ.200

தீப்பொறி சந்தாதாரராக QR கோடை ஸ்கேன் செய்யவும்

நன்கொடைகள் தாரீர்

# புதுச்சேரியில் மெல்லத் தமிழ் இனி சாகும்?

சோ. பா

***எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு!***
***எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்; இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!***

என்று பாடிச்சென்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பிறந்த, தமிழ் வளர்த்த புதுச்சேரி மண்ணில் இன்று தமிழ் படிக்க, தமிழ் வழியில் கல்வி கற்க வழியின்றிச் செய்துள்ளது என் ஆர் காங்கிரஸ்- பாஜக கூட்டணி அரசு. புதுச்சேரி மாநிலத்தின் மக்கள் தொகை 17 லட்சம். இங்கு 2022 ஆண்டு கணக்குபடி அரசு பள்ளிகள் 422, தனியார் பள்ளிகள் 314 உள்ளன. மாணவர்களைப் பொறுத்தவரை 97368 ஆண்கள். 1,58,178 பெண்கள். 555 முன் ஆரம்பப் பள்ளிகளும் உள்ளன. புதுச்சேரி விடுதலை பெற்றபின் ,புதுச்சேரி, காரைக்கால் பகுதிகள் தமிழ்நாடு பள்ளிக்கல்வி வாரியத்திலும் மாகி கேரள பள்ளிக் கல்வி வாரியத்திலும் ,ஏனம் ஆந்திர மாநில பள்ளிக்கல்வி வாரியத்திலும் இணைக்கப்பட்டிருந்தன. அரசு பள்ளிகள் அனைத்திலும் தமிழ், மலையாளம், தெலுங்கு பயிற்று மொழிகளாக இருந்தன. 2005 ஆம் ஆண்டில் புத்தொளிப் பள்ளிகள் (Smart schools) என்ற வகையில் சில அரசு பள்ளிகளில் தனியார் பள்ளிகள் போல் ஆங்கில வழி கல்வி புகுத்தப்பட்டது. தொடர்ந்து 2008- 2009 கல்வி ஆண்டில் சுமார் 80 அரசு பள்ளிகளில் ஆங்கில வழிக் கல்வி புகுத்தப்பட்டது. 2010 ஆண்டு வரை அரசு பள்ளிகளில் தாய் மொழியே பயிற்று மொழியாக இருந்தது. 2010 - 2011 கல்வியாண்டு முதல் திடீரென்று அன்றைய முதல்வர் ரங்கசாமி ஆணையின்படி முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஒன்றிய இடைநிலைக் கல்வி வாரியத் திட்டப்படி ஆங்கில வழி கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அது வெற்றியடையாததால் 2014 ஆண்டில் திரும்பப் பெறப்பட்டது. மீண்டும் 2019- 2020 கல்வி ஆண்டில் ஆறு, ஏழு மற்றும் எட்டாம் வகுப்புகளுக்கு நடுவண் இடைநிலைக் கல்வி வாரிய பாடத்திட்டத்தின்படி ஆங்கில வழி கல்வி தொடங்கப்பட்டது. பின்பு 2022- 2023 ஆண்டு முதல் 9 மற்றும், 11 ஆம் வகுப்புகளுக்கு ஆங்கில வழி கல்வி தொடங்கப்பட்டது. தற்போது 2024 - 2025 கல்வி ஆண்டிலிருந்து அனைத்து அரசு பள்ளிகளும் ஒட்டுமொத்தமாக நடுவண் இடைநிலை, மேல்நிலைக் கல்வி வாரிய பாடத்திட்டப்படி ( CBSE) ஆங்கில பயிற்று மொழி கல்வித் திட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளன. இதன்மூலம் புதுச்சேரி அரசு பள்ளிகளில் தாய்மொழி பயிற்று மொழி ( தமிழ், மலையாளம், தெலுங்கு வழியில் கற்றல்) என்பது இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை தமிழ், மலையாளம், தெலுங்கு ஒரு மொழிப் பாடமாக மட்டுமே உள்ளன. 10, 11, 12 வகுப்புகளில் தாய்மொழி ஒரு மொழிப் பாடமாக கூட இல்லை. கட்டாய மொழிப்பாட திட்டத்தை நடுவண் இடைநிலை, மேல்நிலை கல்வி வாரியம் முழுவதுமாக நீக்கிவிட்டது.

நடுவண் இடைநிலை, மேல்நிலை கல்வி வாரியத் திட்டத்தின் கீழ் இயங்கும் தனியார் பள்ளிகள் மற்றும் கேந்திர வித்யாலயா , நவோதயா என்று அழைக்கப்படும் ஒன்றிய அரசு பள்ளிகளில் 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை தாய் மொழியை கட்டாயமாக படிக்காமலே கல்வி கற்க முடியும். இனி தாய்மொழி பயிற்று மொழியாகவும் இருக்காது, மொழிப்பாடத்தில் தாய்மொழி கட்டாயம் இல்லை என்கிறபோது, தமிழ் மொழி வெறும் பேச்சு மொழியாக குறுகிவிடும். பாஜகவின் சதித்திட்டமான "ஒரே நாடு ஒரே மொழி" புதுச் சேரியில் அமலுக்கு வந்துள்ளது. அதாவது மோடி அரசின் பிஎம்ஸ்ரீ திட்டம் அமலுக்கு வந்துள்ளது. இது தாய்மொழிக் கல்வியை முழுவதுமாக நிராகரிப்பது. இந்தியையும், வடமொழியையும் திணிப்பது. இது தாய்மொழியை மட்டுமே அறிந்த ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களை கல்வி கற்பதிலிருந்து ஒதுக்கி வைக்கும்.

கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டில் புதுச்சேரியில் தமிழுக்கு இருள் சூழ்ந்து வருகிறது. இதை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. தாய் மொழிக்கெதிரான, தமிழ் மொழிக்கெதிரான சங்கிகளின் சதியை முறியடிக்க "இங்குள்ள தமிழர் ஒன்றாதல்" வேண்டாமா?



# ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வு ஊதிய திட்டம் புதிய மொந்தையில் பழைய கள்ளே!

## நான்காம் பிரிவு, தலித், பழங்குடியின ஊழியர் சமூக பாதுகாப்பிற்கு கேடு

மோடி3.0 அரசாங்கம், ஒன்றிய அரசு ஊழியர்களிடமோ, ஓய்வூதியர் சங்கத்தினரிடமோ விவாதிக்காமல் தன்னிச்சையாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் அரசு ஊழியர்களைத் திசை திருப்பவும் பிளவுபடுத்தவும் செய்யப்பட்ட அறிவிப்பாகும்.

இந்த அறிவிப்பின் மூலம் தேசிய ஓய்வூதிய திட்டத்திற்கு எதிராக பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரி நடைபெறும் இயக்கத்தை தடுத்து நிறுத்தி விட்டதாக மோடி அரசாங்கம் நினைக்கிறது. மோடி அரசின் புதிய தேசிய ஓய்வு ஊதிய திட்டத்திற்கு எதிராக கடுமையாகப் போராடியதால் அரசுக்கு ஒரு திருத்தப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அறிவிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. தேசிய ஓய்வூதிய திட்டத்துடன் ஒப்பிடும்போது அளவு ரீதியான மாற்றம் எதுவும் ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் இல்லை. சொல்லப் போனால் ஊழியர்களின் உரிமையான பழைய ஓய்வூதிய திட்டத்தின் மறுப்பே இது ஆகும். அதாவது பல பத்தாண்டுகளாக அரசுக்குச் சேவை செய்த ஊழியர்களுக்கு பலன்களைக் கொடுத்த பழைய ஓய்வூதிய திட்டத்தை இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் ஈடு கட்டாது. பழைய ஓய்வூதிய திட்டத்தில் வரையறுக்கப்பட்ட பலன்கள் உள்ளன. ஓய்வூதியத்திற்காக அரசு ஊழியர்கள் பங்களிப்பு எதுவும் செய்ய வேண்டிய தேவையில்லை. மேலும் நீதிமன்றங்கள் ஓய்வூதியம் என்பது கொடுபடா ஊதியம் என வரையறை செய்து தீர்ப்புகள் வழங்கி உள்ளன.

தேசிய ஓய்வூதிய திட்டத்திற்கும் ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்திற்கும் ஊழியர் தொடர்ந்து அவருடைய சம்பளம் மற்றும் அகவிலைப்படியில் பத்து விழுக்காடு செலுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது. தற்போது பணி இறுதியின் போது ஊழியர்களுக்கு வழங்கப்படும் இறுதிப் பலன்கள் தொடர்பான புதிய அறிவிப்பு அவர்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. மேலும் பழைய ஓய்வூதிய திட்டத்தில் இருந்த வருங்கால பொது வைப்பு நிதி பலன்களை ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் பறித்துவிட்டது.

இன்னமும் கூட ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் நிதிச் சந்தையுடன் இணைக்கப்பட்டு இருப்பதால் என்னதான் அரசு வாக்குறுதி அளித்தாலும் சந்தை அதிர்வுகளுக்கு ஏற்ப ஊசலாட்டம் இருக்கத்தான் செய்யும்..

முழு ஓய்வூதியம் பெறும் சேவை ஆண்டுகள் 20ல் இருந்து 25 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டு இருப்பதும் பகுதி ஓய்வூதியம் பெற சேவை ஆண்டுகளுடன் ஊழியர்களின் பங்களிப்பும் இணைக்கப்பட்டுள்ளதால் தினக்கூலி ஊழியராக இருந்து காலம் கடந்து பணி நிரந்தரம் பெறும் ஊழியர்களும், அரசமைப்புச் சட்டப்படி வயது தளர்வுள்ள தலித், பழங்குடி ஊழியர்களும், முன்னாள் ராணுவ வீரர்களும் ஓய்வூதியம் குறைவாகவே பெற்றிடும் அபாயம் ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் உள்ளது.

ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதிய திட்டமும் தேசிய ஓய்வூதிய திட்டம் போல் ஓய்வூதியத்தை ஒரு சலுகை என்ற வகையில் நிராகரிக்கிறது. அது விகிதாச்சார ஓய்வூதியமாகவே உள்ளது. ஒருங்கிணைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் உச்ச நீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகளை அப்பட்டமாக மீறி இருப்பதுடன் அரசமைப்புச் சட்டத்தையும் மீறுவதாகவே உள்ளது.

அனைத்து வகையிலும் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம் முழுமையாக எதிர்க்கப்பட வேண்டிய ஒன்றே. பழைய ஓய்வு ஊதிய திட்டத்தை மீட்டெடுக்க, போராட்டங்களைத் தீவிரப்படுத்திட அகில இந்திய தொழிற்சங்க மையக் கவுன்சில் (ஏஐசிசிடியூ) அனைத்து பகுதி தொழிலாளர்களையும் அறைகூவி அழைக்கிறது.



# தமிழகத்தில் தொடரும் தூய்மைப் பணியாளர்கள் போராட்டங்கள்

தமிழ்நாட்டில் சென்னை முதல் கோவை, சேலம், தூத்துக்குடி, நெல்லை ,தென்காசி வரை தூய்மைப் பணியாளர் நாள்தோறும் போராடிக் கொண்டிருக்கிறார்கள். கூலி உயர்வு, பணிநிரந்தரம் கேட்டு போராடிக் கொண்டிருந்த தூய்மைப் பணியாளர்கள் தனியார் மயமாக்கத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி நிர்வாகங்களின் கீழ் பணிபுரிந்து கொண்டிருக்கும் தூய்மைப் பணியாளர்கள் ஒப்பந்ததாரர்களுக்கு கீழ் அல்லது தனியார் நிறுவனங்களுக்குக் கீழ் பணி செய்ய நிர்பந்திக்கப்படுகிறார்கள். சென்னை மாநகராட்சியின் கீழ் பணி செய்யும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் உழைப்போர் உரிமை இயக்கத்தின் தலைமையில் பணி நிரந்தரம் கோரியும், தனியார் மயமாக்கத்திற்கு எதிராகவும் போராடி வருகிறார்கள். 19.10.2021 தேதிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதப்படி, பல ஆண்டுகளாகப் பணிபுரிந்து வரும் சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்குப் பதிலாக, அவர்களை தனியார் நிறுவனத்தின் கீழும் ஒப்பந்ததாரர் கீழும் பணி செய்ய நிர்பந்திப்பதற்கு எதிராக பல மாதங்களாக பல்வேறு கட்ட போராட்டங்களை எல்டியுசியின் தலைமையின் கீழ் நடத்திவருகிறார்கள். தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றக் கோரி எல்டியுசி பொதுச் செயலாளர் தோழர் கு.பாரதி காலவரையற்ற பட்டினிப் போராட்டத்தை நடத்தினார். அப்போது இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி, ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் இரணியப்பன் மற்றும் ஏஐசிசிடியு தலைவர்கள் பட்டினி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர். அப்பட்டினிப் போராட்டத்தின் வாயிலாக கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு சென்னை மாநகராட்சி ஆணையர் உத்தரவாதம் அளித்தார். ஆனால், மிக முக்கிய கோரிக்கையான பணிநிரந்தரம் செய்யப்படுவதற்கு மாறாக, தனியார்மயமாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைக் கண்டித்து சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் தொடர் போராட்டத்தை நடத்திவருகிறார்கள். பெண்தொழிலாளர் பெரும்பான்மையாக போராட்டத்தில் கலந்து கொண்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளரை கைதுசெய்து மண்டபத்தில் அடைத்து வைத்தது மாநகராட்சி நிர்வாகம். அந்தத் தொழிலாளரை சந்தித்து ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் இரணியப்பன் ஆதரவினையும் வாழ்த்துகளையும் தெரிவித்துப் பேசினார்.

தூத்துக்குடி மாநகராட்சியில் ‘அவர் லேண்ட்’ என்ற நிறுவனத்தின் கீழ் ஒப்பந்தத் தொழிலாளராக தூய்மைப் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.725 வழங்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டிருந்தபோதும் அந்த சம்பளம் வழங்கப்படவில்லை. தொழிலாளர் ஏஐசிசிடியு சங்கத்தில் இணைந்தார்கள். ஜூன் 27 ஆர்ப்பாட்டம் அறிவிக்கப்பட்டது. மாநகராட்சி ஆணையர் அழைத்துப் பேசி கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று சொன்னார். ஆனால், அதன்படி நடக்கவில்லை. அதனால் ஜூலை 8 உள்ளிருப்பு வேலை நிறுத்தம் என அறிவிக்கப்பட்டது. காவல்துறை குவிக்கப்பட்டிருந்த நிலையிலும் 500 தொழிலாளர் மாநகராட்சியில் திரண்டனர். நிர்வாகம் இறங்கி வந்து பேச்சுவார்த்தை நடத்தி, பெருவாரியான கோரிக்கைகளை நிறைவேற்ற ஆணையர் ஒப்புக்கொண்டார்.

கோவை மாநகராட்சியிலும் தனியார் மயமாக்கத்திற்கு எதிராகவும் பணி நிரந்தரத்திற்காகவும் ஏஐசிசிடியு தலைமையின்கீழ் தூய்மைப் பணியாளர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சேலம் அயோத்தியாபட்டினத்தில் தூய்மைப் பணியாளர்களின் 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 13.9.2024 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் ராஜா தலைமை தாங்கினார். ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் வேல்முருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். தென்காசியில் ஏஐசிசிடியு சங்கத்தில் இணைந்துள்ள தூய்மைப்பணியாளர்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். கடலூர் மாவட்டத்திலும் சங்கம் தொடங்கப்பட்டுள்ளது.

திமுக அரசு தன் தேர்தல் வாக்குறுதியில் கூறியதுபோல் தொழிலாளரின் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் இருப்பது, நம்பிக்கையோடு வாக்களித்த தொழிலாளர்களுக்குச் செய்யும் அநீதி ஆகும். தூய்மைப்பணியாளர் ஒன்று சேர்ந்து மாநிலம் தழுவிய போராட்டத்தில் இறங்கும் நாள் வெகுதொலைவில் இல்லை.



MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20 .09.2024 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to
Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023



டெல்லி சிபிஐஎம்எல் அலுவலகத்தில் நேபாள முன்னாள் பிரதமர் மாதவ்நேபாள்



மின் கட்டண உயர்வைக் கண்டித்து
புதுச்சேரியில் இந்தியா கூட்டணி ஆர்ப்பாட்டம்



அயர்லா உறுப்பினர் சேர்ப்பு – புதுக்கோட்டை



நெல்லையில் சுமைப் பணித் தொழிலாளர்கள் ஏஐசிசிடியுவில் இணைந்தனர்

கொல்கத்தா மருத்துவர் கொலைக்கு தன்பாத்தில் நடந்த மெழுகுவர்த்தி ஊர்வலம்




Owned and Published by; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh